பாபாலால்—ரத்ன, தங்க, வெள்ளி நகை வியாபாரிகள்
216, சைனாபஜார் ரோட், சென்னை.

Regd. No. M. 916.

॥ ஸ்ரீ: ॥

# வேதாந்த தீபிகை.

ஸம்புடம் 19 ] சுக்லஷூ ஆடிமீ [ ஸஞ்சிகை 10.



ஸம்பாதகர்:—ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.

வருஷ சந்தா ரூ. 3.] July, 1929. [ஸஞ்சிகை 1-க்கு அணா 6

ஸ்ரீ:

## விஷய ஸூசிகை.


1. ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்:—ஸ்ரீ. உப. வித்வாந் ஏ. வி. கோபாலாசார்யர் ... ... 267
2. வேதாந்த பாரிஜாத ஸௌரபமும், ஸ்ரீ நிம்பார்க்காசார்யரும்:— ஸ்ரீ. உப. வித்வாந் தட்டை ஸ்ரீநிவாஸாசார்யர், திருச்சி ... 278
3. இரண்டாந் திருவந்தாதி:—ஸ்ரீ உப. வித்வாந் வை. மு. கோபால க்ருஷ்ணமாசார்யர் ... ... 283
4. உபாகர்ம விஷயம்:—ஸ்ரீ உப. வித்வாந் மதுராந்தகம் கருடபுரம் தி. ஈ. ஸ்ரீநிவாஸாசார்யர் ... ... 291
5. ஸ்ரீ. வை. ஸி. ஸபையின் வார்ஷிக மஹோத்ஸவம்:— ... 294
6. ஸம்பாதகீயம்:— ... 302
7. ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹம்:—ஸ்ரீ உப. வாஸுதேவாசார்யர் ... 249



# வைரங்கள்.

# T. B. MEHTA & SONS,

DIAMOND MERCHANTS,

453, Mint Street, P. T. Madras.

**Phone No. 3555.**

ஸ்ரீ:

॥ ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம: ॥

# வேதாந்த தீபிகை.

ஸம்பாதகர்:—வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 19 ] சுக்ல௵ ஆடி௴ [ஸஞ்சிகை 10

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே ।
வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா ॥

[ ஸ்ரீ பாகவதம், 1-9-23 ]

ஸ்ரீ:

## ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்.

(ஸ்ரீ. உ.வே. வித்வான் ஏ. வி. கோபாலாசார்யர்.)

[ஸஞ்சிகை 8, பக்கம் 222 தொடர்ச்சி]

'ரத்யா புருஷன்' என்கிற பதத்தைத் தாத்பர்ய சந்த்ரிகையிலும் ஸ்வாமி ப்ரயோகிக்கிறார். 'தெருவில் போகிறவனால் கூறப்பட்டதல்ல; பகவானாகிய கண்ணனால் இது கூறப்பட்டது' என்று அங்கே உரைக்கப்பட்டது. தெருவில் போகிறவனை ஸாமாந்ய மநுஷ்யன் என்கிற அர்த்தத்தில் இங்கிலீஷ் பாஷையிலும் சொல்வதுண்டு. காமாதிகளை எவ்வளவு அடக்கினாலும் அழித்தாலும் அவைகள் மறுபடியும் மறுபடியும் உயிர் பெற்று, 'வாநர ஸைந்யங்களைப்போல் செத்தாலும் பிழைக்கும்' என்று காமன் சொல்லுகிறான். ஸுக்ரீவ படர்களைக் காமாதிகளுக்கு உவமையாகச் சொல்வது அழகு. சபல குணம் இரண்டுக்கு முண்டு. வாஸனையின் சக்தி தொலைபவே தொலையாது என்கிறான் மந்மதன். தேகம் போனாலும் பூர்வ வாஸனை அப்படியே மறுபிறப்பில் திரும்பிவரும் என்று கீதையிலும் கூறப்பட்டது. ஸர்வ ஜகத்

துக்கும் ப்ரளயம் வரும்பொழுதும், வாஸனைக்கு ப்ரளயம் கிடையாது. தங்கள் குலத்தையும் எதிரிகள் குலத்தையும் சேர்த்து விவேகாதிகள் அழிக்கப் பார்ப்பதாலும், வெகு நாளாகப் புருஷன் அநுபவித்து வந்த ப்ரக்ருதியைக் கண்ணெடுத்துப் பார்க்காமல் பிரிப்பதாலும், விவேகாதிகள் பாபிகளென்றும் மோக கர்மாக்களென்றும் மூட சேதஸ்ஸுக்களென்றும் காமன் நிந்திக்கிறான். மோக கர்மாக்களென்றும் விசேதஸ்ஸுக்களென்றும் ஆஸுர ப்ரக்ருதிகளைப் பகவான் கீதையில் நிந்திக்கும் வார்த்தைகளைச் சொல்லி, ஆஸுர ப்ராக்ருதியான காமன் தெய்வத் தன்மையுடைய விவேகனை நிந்திப்பதைக் கேட்டுக்கொண்டு, விவேகன் திரைக்குள்ளிருந்து ஆச்சர்யத்துடன் அதைக் கண்டித்துப் பேசுகிறான். புருஷனைக் கூடஸ்தரென்று அழகாகச் சொல்லுகிறான். கூடஸ்தரென்பது குலத்துக்குத் தலைவனையும் சொல்லும்; நிர்விகார ஸ்வரூபனான ஆத்மாவையும் சொல்லும். அவரை ஓயாமல் விலங்கில் போட்டிருக்கிறவர்கள் காமாதிகள். அவரை விலங்கிலிருந்து விடுவித்து, அவருக்கு இட்டுப் பிறந்த தாயமான மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை ஸம்பாதித்துக் கொடுக்கப் பரம புருஷனுடைய கருணையை முன்னிட்டு ப்ரயத்நம் செய்கிறார் விவேகமஹா ராஜர்.

“ஸ்வாயீநஸம்ஸாரணநாட்யநிர்வ்ருத்தை:
ஸந்தோஷித: ப்ரணத ஹர்ஷிகயாஸ்ய பும்ஸ: ।
ஸாத்யே வியாஸ்ருதி விஹா: ஸ்ப்ருதிஹந்நஹம்
க்ரீடாநட: ஸ ஹமவாநு கரவயா ஸ்வஸாத்யம் ॥ ”

இந்த ச்லோகத்தின் அழகு விஸ்தாரமாய் அநுபவிக்கத் தக்கது. ந்யாய ஸித்தாஞ்ஜநத்தில் ஜீவ பரிச்சேதத்தின் முடிவில், ‘காஞாம் ப்ராவ்ருதிக்ருகஉரஷிதாம் வயஷாயதொ ஹர்ஷிகாம் கெநாவ்ருஹ்தநாடகெந கஉவி ஸ்ரீஉஞஉாநம்ஷயநு’ என்கிற ச்லோகத்தில், மாறி மாறி விசித்ர கர்ம ரசிதமான பல பிறப்பென்னும் வேஷங்களைத் தரித்து அநேக கோடி நாடகங்கள் ஆடும் ஜீவன், ஒருக்கால் ஸுக்ருத பரிபாகத்தால் ப்ரணதன் (அதாவது ப்ரபந்நன்) என்கிற ஒரு அத்புதமான வேஷத்தை எடுத்து ஸ்ரீமானாகிய ப்ரபுவின் முன்னர் ஆடினால், அதைக் கண்டு காணாத காட்சிபோல் மகிழ்ந்து கொண்டாடி, தேஹாதி மலங்களாகிய அழுக்குகளை நீக்கி, ஸர்வ வ்யாபியான காந்தி ப்ரபையுடைய ஜீவரத்நத்தைச் சுத்தமாக எடுத்துத் தம் மார்பில் கௌஸ்துபம் போல் அணிந்து கொள்ளுகிறான் என்று சொல்லப்படுகிறது. ப்ரபஞ்சம் முழுவதும் ஒரு நாடக ரங்கமென்றும், அதில் அந்தந்த ஜனங்கள் அவரவர்க்கு ஏற்ற வேஷங்களை யெடுத்து ஆடுகிறார்களென்றும், ஆங்கிலேய கவி ஸார்வ பௌமருடைய வார்த்தை இதை அநுஸரித்

தது. 'ஸஹ்ருதய ஸ்ஸங்ஸ:' என்பது, முன் சொல்லப்பட்ட ஜீவன் என்கிற இந்தப் புருஷனைக் காட்டுகிறது. கூத்தாடியான ஜீவனுடைய அபூர்வமான ப்ரபந்ந வேஷத்தின் ரஸத்தில், அத்புத வேஷங்களின் ரஸங்களை யறிந்த பெரிய கூத்தாடியாகிய அந்தப் பரம புருஷன் ஆநந்தித்துத் தன்னுடைய அருளினால் இவனுக்கு ஆநந்த விஷயத்தில் ஸாம்யத்தைக் கொடுக்கிறார். கூத்தாடியின் வேஷ ரஸத்தைக் கூத்தாடிதான் அறிவான். ஸம்ஸரண மென்பது ஸம்ஸாரத்தையும், அழகான விலாஸங்களுடன் ரங்க பூமியில் முன்னும் பின்னும் அடிவைத்து அசையும் நாட்யத்தையும் சொல்லும். 'நிர்வஹ' என்கிற பதத்தினால் நாமரூபங்களை நிர்வஹணம் பண்ணுவதைச் சொல்லும் ச்ருதி ஸ்மாரிதம். ஆநந்தாநுபவத்தில் ஸாம்யத்தை அளித்தாலும், ப்ரஹ்மத்திற்கு அஸாதாரணமான அடையாளமும் லக்ஷணமுமான ஜகத் ஸ்ருஷ்டி பாலநம் முதலிய ஐச்வர்யத்தில் மட்டும் பேதம் போவதில்லை. முதலில் சாஸ்த்ராரம்பத்தில் ஜகத் ஜந்மாதிகளை ப்ருஹ்மத்திற்கு லக்ஷணமாகக் கூறிய ஸூத்ரகாரர், சாஸ்த்ரம் முடிவில் அந்த லக்ஷணத்திற்குக் குறைவு வாராமல் போகத்தில் மட்டும் ஸாம்யத்தை அடைந்தாலும், ஜகத் வ்யாபாரமான ஸ்ருஷ்டி பாலநம் முதலிய ஐச்வர்யம் ப்ருஹ்மத்திற்கே யொழிய முக்தனுக்கு இல்லை என்று கூறினார். இருவர்களும் நடர்களானாலும் ஈச்வரன் விளையாட்டுக்காகத் தன்னிச்சையால் நடிக்கிறான்; ஜீவனோ கர்மவசத்தால் தன்னிச்சையன்றியில் ஈச்வரன் இச்சையால் நடிக்கிறான். ஈச்வரன் தன்னுடைய வேஷங்களுக்கும் ஜீவனுடைய வேஷங்களுக்கும் நிர்வாஹகன். ஜீவனுடைய வேஷங்கள் ஈச்வரனால் நிருடமாகும்; அதாவது நிர்வஹிக்கப்படும்.

மஹா மோஹாதி சத்ருக்களை ஜயிப்பதால் மிகுந்த யசஸ்ஸும், தகப்பனாகிய புருஷனைப் பரிபூர்ணமாய் உஜ்ஜீவிக்கச் செய்து காப்பாற்றுவதால் அதிகமான தர்மமும், நம்முடைய சிர மநோரதமும் ஸித்திப்பதால் ஹர்ஷமும் நம்மைத் தேடிவருகிறது என்று விவேகன் சொல்லுகிறான். காமன், அவனும் ஸுமதியும் வருவதைப் பார்த்துத் தாங்கள் ஒன்றியாய்ச் சத்ருக்கள் முன் நிற்கக்கூடாதென்று சொல்லுகிறான். 'ஸமுதீர்ணா:' என்பது 'ஸமிதேஷ்வப்ரதிஷ்டாநா:' என்பது போல் சத்ருவை எதிர்த்து வருவதைக் காட்டுகிறது.

"ப்ரத்யூஹாவீம் ஸமுத்தித்விஷ ப்ரதிதும்
ப்ராப்தோऽயமவஸரோ மமாப்யுதயவ:।
ப்ராஜ்ஞஸ்ய ஸம்ப்ருதிஃபலவேஷா ஹிரண்யம்
ஸாம்ராஜ்யஸ்ய ஸஜதி விஷ்ணுபதம் விவேக:॥"

இந்த ச்லோகத்தின் அழகு அப்பய்ய தீக்ஷிதர் மநஸ்ஸைக் கவர்ந்தது. இந்த நாடகத்தில் விவேகன் நாயகன். ஸங்கல்ப ஸூர்யோதய நாடகத்தில் நாயகனான விவேகன், இங்கே ஸூர்யனாக ரூபணம் செய்யப்படுகிறான். ஸூர்யன் விஷ்ணுபத மென்கிற ஆகாசத்தை அடைவது போல், விவேகனும் விஷ்ணு பதமென்கிற திருவடியைப் பஜநம் செய்கிறான்: ஸூர்யன் மேற்கு முகமாகத்தன்னுடைய ஒளியைப் பரப்புவதுபோல்; விவேகன் உள்ளேயிருக்கும் ப்ரத்யக் என்னும் ஆத்மாவுக்குள் நல்ல ஜ்ஞாந ப்ரபையைப் பரப்புகிறான். 'ப்ரத்யங்முகீம்' என்கிற பதத்தில் உள்ள ச்லேஷையின் அழகு கவிகள் மனத்தைக் கவரும். அந்தப் பதம் 'மேற்கு முகமாய்' என்பதையும், 'உள்ளே யிருக்கும் ஆத்மதத்வ விஷயமாய்' என்பதையும் சொல்லும். 'ப்ரத்யங்முகம் தவ முகாம்புருஹம் ப்ரத்யங்முகா ஸ்திமிததியம் நயநைர்நிபீய' என்று வரதராஜ ஸ்தவத்தில் தீக்ஷிதர் தேவப் பெருமாளின் திருமுகமண்டலாநுபவத்தை அநுபவித்தார். அங்கே இந்த இரண்டர்த்தங்களும் இந்தப் பதத்தினால் காட்டப்படுகின்றன. தேவப் பெருமாள் மேற்கு முகமாய் எழுந்தருளியிருந்தாலும், ப்ரத்யங் முகமாயிருப்பவர்கள் அவருடைய திருமேனியை நன்றாய் அநுபவிக்கிறார்கள். மேற்கு முகமாயிருப்பவரை மேற்கு முகமா யிருப்பவர்கள் எப்படி ஸேவித்துக் கொள்ளக் கூடும் என்று விரோதங் காட்டுவதில் நோக்கு. ப்ரத்யங் முகராய் உள்ளே அந்தப் பெருமானை த்யாநம் செய்பவர், ப்ரத்யங் முகரான அந்தப் பெருமானை ப்ரத்யக்ஷம் போல் நன்றாய் அநுபவிக்கிறார்களென்று விரோத பரிஹாரம். இந்த ப்ரயோகம் இந்த ச்லோகத்தின் அநுபவத்தை மூலமாக உடையது என்பது நிச்சயம். உதய காலத்தில் எப்படி ஸூர்ய பிம்பம் அதிகமான ராகத்தோடு கூடியிருக்குமோ, அப்படியே விவேகமும் ஆரம்பிக்கும் காலத்திலேயே பரமாத்மா விஷயத்தில் ராக மென்கிற பலத்தை உடையதாயிருக்கும். 'பல ஹீநர்களால் ஆத்மாவானது அடையக் கூடியதல்ல' என்கிற சட்வல்லியை நோக்கி இங்கே பலத்தைச் சொல்லுகிறது. பனி திகந்தங்களில் வ்யாபித்துப் பதார்த்தங்கள் தெரியாமல் மூடுவதைப் போல், அஹங்காரம் ஒன்றுந் தெரியாமல் புத்தியை மறைக்கும். விவேக ஸூர்யனால் அந்தப் பனி தொலையும். அஹங்காரம் முதலே யென்று இந்த அங்கத்தில் பின்னால் கூறப்படும். விவேக ஸூர்யன் உதயமானால் ஈச்வரனுடைய ஸங்கல்ப ஸூர்யன் உதயமாகும் என்பது இங்கே விஷ்கம்பகத்தின் முடிவில் த்வநியால காட்டப்படுகின்றது. 'யாரோ ஒரு தீரன் இந்த்ரியங்களை உள்நோக்கச் செய்து ப்ரத்யகாத்மாவைப் பார்த்தான்' என்கிற ச்ருதி இங்கே ஸ்மரிதம்.

காமனும் ரதியும் வஸந்தனும், விவேகனும் ஸுமதியும் வரவே ஓடிப் போகிறார்கள். விவேகன் முன்பு காமன் மறைவான்.

'பஶ்யதி பரேஷு தோஷாநஸதோऽபி ஜந: ஸதோऽபி நைவ
விபரீதநிஜாந் ஸ்வஸ்மிந் மஹிமா மோஹாஞ்ஜநஸ்யைஷ: ॥ [ஸுபாஷி|

விவேகனால் கூறப்படும் இந்த ச்லோகம் ஒருயர்ந்த ஸுபாஷித மென்று 'ஸுபாஷித நீவி' என்கிற க்ரந்தத்தில் ஸ்வாமியால் சேர்க்கப்பட்டிருக்கிறது. அஞ்ஜநமென்பது, கண் நன்றாய்த் தெரியும்படி செய்யும் மையைச் சொல்லுவது. மோஹ மென்னும் மை பிறரிடத்தில் உள்ள குணங்களை அடியோடு தெரியாமல் மறைத்துவிடும். இந்த மறைக்கும் சக்தி மோஹத்தின் ஆவரண சக்தி. பிறரிடத்தில் அடியோடு இல்லாத தோஷங்களை, இருப்பதுபோல் மோஹம் காட்டும். இது அதன் விக்ஷேப சக்தி. தன் விஷயத்தில் இதற்கு விபரீதமாக அதாவது தலை கீழாகக் காட்டும். தன்னிடத்திலுள்ள தோஷங்களை அடியோடு மறைக்கும்; தன்னிட மில்லாத குணங்களை உள்ளதுபோல் காட்டும். அஸத்தை ஸத்தாகவும் ஸத்தை அஸத்தாகவும் காட்டுவது மன்றி, தன்னிடம் ஒரு ப்ரகாரமாயும் பிறரிடம் அதற்கு விபரீதமாயும் காட்டும் வலிமையுடையது மோஹ மென்னும் விபரீத ஜ்ஞானம். குரூபியாயிருப்பவர், மிகவும் சுத்தமான கண்ணாடி தன்னுடைய அழுக்கினால் தங்களுடைய முகத்தை விகாரமாகக் காட்டுகிறதென்று சொல்வதுபோல் இந்த ஸ்வபாவம், என்று ஸுமதி சொல்லுகிறாள்.

'அவள் ஆப்தர்களுக்கு வேண்டிய லக்ஷணமாகிய உள்ளபடியே பார்க்கும் தன்மையையும், தான் அறிந்தபடியே சொல்லுந் தன்மையையும் உடையவளென்றும், சிறந்த கவியின் காவ்யத்தைப்போல் அவள் குற்றமற்றவளாயும், வாக்குக்கும் மநஸ்ஸுக்கும் எட்டாத ஆஹ்லாத மயமான ரஸாநந்தத்தை அடைவிக்கும் தன்மை உடையவளாயும், குணங்கள், அலங்காரங்கள், பாவங்கள், ரஸங்கள் இவைகளால் சோபிப்பவளாயும் இருக்கிறாள்' என்றும் அவளை பேசுகிறார். நல்ல காவ்யத்தின் குணங்களை மெச்சுவதில் ஸ்வாமிக்கு மிகவும் நோக்குண்டு. அநேக க்ரந்தங்களில் இதைக் கொண்டாடுவதுண்டு. தாம் செய்யவேண்டிய கார்யம் இன்னதென்று ஸுமதியிடம் மஹாராஜர் சொல்லுகிறார். பராநுக்ரஹ வ்ரதத்தை நிறைவேற்றிவைக்கவேண்டியது அந்தக் கார்யம் என்கிறார். இங்கே 'பர' சப்தம் பரமாத்மாவையும் சொல்லும். சேதநனை அநுக்ரஹித்துக் காப்பாற்றுவது அவருடைய வ்ரதம். அந்த வ்ரதத்தில் அவன் ஸபத்நீகனாகத் தீக்ஷிதனாயிருக்கிறான். அந்த வ்ரதத்திற்கு நாம் விவேகத்துடனும் ஸுமதியுடனும் இசைந்து அதை ஸாதிக்கவேணும். அயலானாகிய ஜீவனை அநுக்ரஹிப்பது விவேகனுடைய வ்ரதம் என்றும் சொல்லலாம். இங்கே உள்ள ச்லோகத்திலும் பகவானுடைய தயையினாலேயே இந்த விஷயத்தில் தைர்யம் உண்டாவு

தாகக் கூறுகிறது மன்றியில், ஜீவனை பர ப்ராப்தியினால் தர்யஞசச் செய்வதற்குத் தான் நியமமென்கிற வ்ரதத்தைக் கொண்டிருப்பதாகவும் சொல்லுகிறார்.

இந்தப் பெரிய ஆரப்பமென்று முதலாவதாகிய ஆரம்பம் இங்கே முதலில் விவேகனால் நிர்த்தேசிக்கப்படுகிறது. உள்ளும் புறமும் உள்ள சத்ருக்களை நிரஸநம் செய்கிறதென்கிற நியமத்தையும், ஸமாதியில் சேதநனை அவன் குற்றத்தைக் களைந்து சேர்ப்பித்து அவனை ப்ரஹ்ம ப்ராப்தியாகிய பலத்தை அடைவிக்கிறதென்று ப்ராப்த்யாசை, நியதாப்தி, பலாகமம் என்கிற அங்கங்களும் இங்கே கூறப்படுகின்றன. ‘ப்ரஹ்ம வித்தானவன் பரத்தை அடைகிறான்’ என்கிற ச்ருதியை அநுஸரித்து இங்கே பரப்ராப்தியென்று கூறியது. ‘சுத்தமும் ஆநந்தமும் ஸ்வயம் ஜ்யோதிஸ்ஸுமான ஸ்வரூபத்தை உடைய சேதநன் எல்லாவற்றையும் யதாவத்தாக அறியக்கூடிய ஜ்ஞாநமென்கிற தர்மத்தை ஸ்வபாவமாக உடையவனாயிருந்தும், எப்படி காம க்ரோதாதிகளுக்கு ஆளாகி ஸம்ஸாரத்தில் அழுத்தப்படுகிறான்?’ என்று ஸுமதி கேட்க, ‘அநாதியாயிருப்பதை நாம் எப்படி ஆக்ஷேபிப்பது? த்ருஷ்டத்தில் அபலாபம் கூடுமோ? சாஸ்த்ரத்தால் ஏற்படும் அர்த்தத்தை நாம் விச்வஸிக்காமல் இருக்கலாமா? சுத்தமான கண்ணாடிபோல் ஸ்வயம் அழுக்கில்லாத சேதநன் அநாதி காலமாய்க் கர்மமென்கிற உபாதியால் தன்னுடைய எல்லாவற்றையும் அறியக் கூடிய யோக்யதை உடைய ஜ்ஞாந மென்னும் தர்ம விஷயத்தில் சுருங்குதல் முதலிய மாறுதலை அடைந்திருக்கிறான். மாறுதலுக்குக் காரணமான கர்மோபாதியை நீக்கிவிட்டால் இவனுக்கு ஸ்வபாவமாயுள்ளது உள்ளபடியே நிலைத்துவிடும். கர்மமென்பது ஈச்வர ப்ரீதிகோபம். ஈச்வரனுடைய தயா ஸங்கல்பத்தால் அந்த அநாதி கர்மங்களைக் கழிக்க வேணும்’ என்று சொல்லுகிறார். ‘எல்லையில்லாத கருணையுடைய லக்ஷ்மீபதி ஏன் இவ்வளவு காலம் இவனை ரக்ஷிக்காமல் உபேக்ஷிக்க வேணும்?’ என்று ஸுமதி கேட்கிறாள். தன்னைப் போல் ஒரு ஸ்த்ரீக்கு வல்லபனாயிருந்தும், அவளும் அவளிட்டது சட்டமான அவனும் பராங்முகமாய் இருப்பது ஆச்சர்யமென்று ஸுமதியின் பாவம். இதற்கு விவேகன் பதில் சொல்லுகிறான்.

“ 𑌶𑍍𑌰𑌿𑌯𑌃 𑌕𑍍𑌷𑍁𑌹𑌕𑍍𑌵𑌨𑌾𑌵𑌿𑌷𑌯𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌲𑍀𑌲𑌾𑌦𑌯𑌾
𑌵𑌰𑌿𑌮𑍃𑌹𑌣𑌕𑌲𑌤𑌾𑌕𑍍𑌷𑍍𑌵𑌯𑌿𑌤𑍍𑌵𑌾𑌚𑌵𑌶𑍍𑌯𑌃 𑌵𑍃𑌹𑌾𑌃 ।
𑌸𑍍𑌵𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑌸𑌂𑌸𑍍𑌥𑍇 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍 𑌦𑌯𑍇𑌕𑍍𑌷𑌣𑍇 𑌕𑍃𑌤𑌿𑌷𑍁
𑌸𑌾𑌣𑌕𑍍𑌷𑌤𑌯𑌿𑌵𑌿 𑌕𑍃𑌤𑌾𑌦𑌾𑌵 𑌵𑌿𑌵𑌾𑌦𑌃 𑌵𑌾𑌦𑌿𑌨𑌃 ॥

தயா மூர்த்தியாவாள் லக்ஷ்மீ. பகவானுக்குத் தயை என்றும், லீலையென்றும் இரண்டு தேவிகள் உண்டு. அவ்விருவரும் விருத்தமாக அவரை இழுக்கிறார்கள். லீலை ஒரு பக்கம் இழுக்கிறது. தயை இன்னொரு பக்கம்

இழுக்கிறது. இவ்விருவருக்குமுள்ள கலஹத்தைத் தீர்த்து ஸமாதாநம் செய்து, தயைக்கு ஜயம் கொண்டுவர ஈச்வரன் மிக்க ப்ரயத்நம் செய்கிறார். நம்முடைய கர்மங்களால் நாம் படும் ஸங்கடங்களை விட, அயோக்யர்களான நம்மைத் தன் தயையால் ரக்ஷிப்பதற்கு அவன் படும் ஸங்கடம் அதிகமானது. ‘பரிக்ரஹணம்’ என்கிற சப்தத்தால் இருவரும் தேவிகளாகக் கொள்ளப்பட்டதாக ஸூசநம். இவர்களுடைய வ்ருத்தி பரஸ்பரம் விருத்தமானது, ஸம்ஸாரத்தில் அழுத்துவதில் லீலாதேவியின் நோக்கு; ஸம்ஸாரத்திலிருந்து உத்தாரணம் செய்து கரை ஏற்றுவதில் தயா தேவியின் நோக்கு. ஸபத்நிகளாகிய இவர்கள் ஒருவர்க்கொருவர் கலகப்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள். “பஹ்வ்ய: ஸபத்ந்ய இவ கேஹபதிம் லுநந்தி” என்று சுகர் கூறியது போல் இவ்விருவருக்கும் நடுவில் ஈச்வரன் அவஸ்தைப் படுகிறார். இவர் ப்ரபுவாயிருந்தாலும் இவர் பாரவச்யத்தையே அதிகமாக உடையவரென்பது ப்ரஸித்தம். இப்படித் தேவிமாரிருவரும் கலகப்பட, சாஸ்த்ர ஸம்மதமான ஒரு வ்யாஜத்தை அவலம்பித்து, சேதநனைக் காப்பாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு ஏற்படுகிறது. அப்படி ஒரு வ்யாஜத்தைக் காட்டாவிட்டால் லீலாதேவி இடம் விடமாட்டாள். அஜ்ஞாதஸுக்ருதமென்பது வ்யாஜத்தில் முதற்படியாகும். அந்த ஸுக்ருதம், அதைச் செய்கிற நமக்கும் தெரியாது. அதை ஈச்வரன்தான் நாம் செய்ததாகக் கண்டுபிடித்துக் கொள்ளவேணும். செய்தவனுக்கும் செய்தது தெரியாமல் ஸுக்ருதம் செய்ததாக ஈச்வரன் நினைக்கிறானென்பது ‘ஸ்வநுக்ஷித ஸுக்ருதே’ என்கிற பதத்தால் ஸூசிக்கப்படுகின்றது. ‘ஸுக்ருதலக்ஷணே’ என்று ஏதாவது ஒரு நீண்ட பரிஷ்காரத்தால் இதை ஸுக்ருத கோடியில் அந்வயிக்கும்படி எப்படியோ ஒரு லக்ஷணம் ஏற்படுத்தி, இதை ஸுக்ருதத்தில் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று வேடிக்கையாய் ஸூசநம். ஒரு கர்மாவானது அது விஷயமான ஜ்ஞாநத்தை முதலில் அபேக்ஷிக்கும். அஜ்ஞாத ஸுக்ருதமென்று செய்தவனுக்கே தெரியாமல் ஸுக்ருதத்தில் சேரவேணும். அக்ஷரமான மோக்ஷத்தை நாம் அழிப்பதிலேயே யத்நம் செய்கிறோம். அப்படிச் செய்துகொண்டிருக்கையிலேயே நம்மை அறியாமல் அக்ஷரம் கிடைக்கும்படியான மார்க்கத்தில் ஒரு ஸுக்ருதத்தைச் செய்துவிடுகிறோம். ஸுக்ருதமென்று கணக்கில் எடுக்கக் கூடிய ஒரு கார்யத்தில் நாம் தெரியாமல் இறங்கிவிடுகிறோம். அதைக் கணக்கில் சேர்த்துக்கொண்டு ஈச்வரன் தமது தயையினால் நம்மைக் காப்பாற்ற முயலுகிறார். செல்லு என்கிற கறையான் பூச்சி, ஓலை ஏடுகளில் எழுதியிருக்கும் அக்ஷரங்களை அழிக்கவேண்டுமென்றே க்ஷதங்களை (அதாவது த்வாரங்களை) உண்டாக்குகின்றது. அப்படி விருத்தமாக அவைகள் செய்து கொண்டே இருக்க, அவைகளுக்குத் தெரியாமல் அந்த ஓட்டைகளில்

அக்ஷரம்போன்ற ஆகாரம் உண்டாகி விடுகிறது. அந்த அக்ஷராகாரத்தை அவைகளே செய்தபோதிலும், அதைச் செய்வதாக அவற்றுக்குத் தெரியாது. அதைப்போலவே நமக்குத் தெரியாமலே நம்முடைய விருத்தாசரணத்தில் கூட நம்மை அறியாமல் அக்ஷரமார்க்கத்தில் கணக்கெடுக்கக்கூடிய ஒரு ஸுக்ருதத்தைச் செய்து விடுகிறோம். இதை த்வாரமாகக்கொண்டு ஈச்வரனுடைய தயை மேலும்மேலும் வேலை செய்ய ஆரம்பிக்கிறது,

'அநாதி காலமாய் ரக்ஷணத்திற்கு அவகாசம் இது வரையில்லை ற்படாமலிருக்க, மேல் காலம் அநந்தமாயிருந்தாலும் ரக்ஷணத்திற்கு ப்ரத்யாசை ஏது ?' என்று ஸுமதி சங்கிக்கிறாள். ஸுக்ருத பரிபாகத்தால் ஒருக்கால் ஏற்படக்கூடும் என்கிறான் விவேகன்.

“தேஹே காராக்ருஹே தசேந்த்ரியாநநநக்தஞ்சராதிஷ்டிதே
ஸம்ஸாராப்தி ஸவசீக்ருதா வசீக்ருதே தீநாம் ஸ்வஸாரார்த்திகா: ।
ஆத்யோ ஹநூமத்ஸத்ருச ஸ்வாஸார்யா ஸ்வரூபவித்யாயிந: ஸ்வாசார்ய
ஸ்வகாருண்யவித்தே ஸாம்ராஜ்யதயாப்யாயேத ஸ்வாஸ்வாத்யதே ॥”

'தசேந்த்ரியாநநம் கோரம்' என்கிற ச்லோகத்தில் சொன்னது விஸ்தாரமாகவும் தெளிவாகவும் இங்கே காட்டப்படுகிறது. மநஸ்ஸென்னும் ராக்ஷஸனுக்குப் பத்து இந்த்ரியங்களாகிய பத்துத் தலைகளுண்டு. நம்முடைய மநஸ் தான் பத்துத்தலை ராவணன். அவன் கொழுப்புப் பிடித்தது போல், இந்த்ரியங்களும் மநஸ்ஸும் உத்ததமாகத் திமிர் பிடித்தவை. நம்முடைய சரீரம் ஸம்ஸார ஸாகரத்தால் சூழப்பட்டது. மணிவரம்போல் ப்ருஹ்மத்தின் மார்பில் இருக்கவேண்டிய நம் ஸ்வரூபத்தை அந்த மார்பில் சேரவொட்டாமல் பிரித்து, தேஹமென்கிற காராகாரத்தில் நம் மநஸ் சிறைப்படுத்துகிறது. பகவானுடைய திருமார்பில் அவனுடைய ப்ரபையாக இருந்து விளங்கவேண்டிய ஸீதையை, அங்கே இருக்கவொட்டாமல் கடல் சூழ்ந்த இலங்கையில் பத்துத்தலைகளை உடைய ராவணன் சிறைப்படுத்தியது போல், நாமும் இந்தத் தேஹத்தில் சிறைப்பட்டிருக்கிறோம். 'நக்தஞ்சர' என்று இந்த ஸம்ஸார இருட்டில் ஸஞ்சரிக்க ஸாமர்த்யமுடையவன் மநஸ்ஸென்கிற ராக்ஷஸன் என்று ஸூசநம். தீநமான தசையை அடைந்திருப்பதாகச் சொல்லுவதால் 'வசீக்ருதாநவரம்' என்று ஸீதையின் அவஸ்தையைச் சொன்ன ராமாயண ச்லோகம் ஸ்மாரிதம். அம்மாதிரியான துர்த்தசையை அடைந்திருக்கும்பொழுது ஹநுமாரைப் போன்ற ஆசார்யரான சில தார்மிகர், இவன் ஸ்வரூபத்தையும் இவனுக்கு இட்டுப்பிறந்த மோக்ஷ ஸாம்ராஜ்யத்தையும் இவன் வரவை இவன் பதியான ஈச்வரன் எதிர்பார்த்துக்கொண்டே இருப்பதையும் இவனுக்குத் தெரிவிக்க,

இவன் உடனே பதியை அடையவேண்டுமென்றும் அவனன்றியில் ஒரு க்ஷணங்கூட உயிர்தரிக்க முடியாதென்றும் ஸீதையைப்போல் வருந்துகிறான். மனஸ்ஸில் வந்த இருட்டு ஹ்ருதய குஹாந்தகாரத்தை நீக்கக்கூடிய குருவினால் நீங்கும் என்பதைக் காட்ட 'மோஹ' சப்த ப்ரயோகம். விதேஹ ராஜ புத்ரி என்று சொல்லுவதால் இவன் தேஹமென்கிற சிறைக்குள் வருந்தும் ஸ்வபாவமில்லாதவன் என்றும் பாவம் த்வநிக்கிறது. 'தேஹே' என்பதற்கு எதிர்த்தட்டாக 'விதேஹ' சப்தம் ப்ரயோகித்தது. 'ப்ரவ்ராஜித' என்று 'ப்ர' என்கிற உபஸர்க்கத்தை ப்ரயோகித்ததால் 'ப்ரவ்ராஜ' என்ற இடத்தில் போல் குருபதேசத்தைக் காட்டுகிறது. தேஹத்தை லங்கா புரத்திற்கு உபமானமாகச் சொன்னதும், தேஹத்தை ப்ரம்ஹபுரம் என்று சொல்லும் தஹரவாக்யம் ஜ்ஞாபகத்திற்கு வந்து, அடுத்த ச்லோகத்தில் 'ப்ராஹ்மே புரே' என்று தேஹத்தை நிர்த்தேசிக்கிறார். இந்தச் சரீரமென்னும் பட்டணம் ப்ரஹ்மத்தை ஸ்வாமியாக உடையதென்றும், அது ப்ரஹ்மத்தினுடையதே என்றும், அந்தப் பட்டணத்தின் உள்ளே புர ஸ்வாமியாகிய ப்ரஹ்மத்தை ஹார்த்தனாகத் தர்சநம் செய்து ஸேவித்துக்கொள்ளலாமென்றும், 'ப்ரஹ்மபுர'மென்று ச்ருதி சொல்லுவதற்குப் பாவம். 'ப்ரஹ்ம' என்னும் பதம் நிரம்பவும் பெரியதையும் பூர்ணத்தையும் சொல்லும். இது பெரிய பூர்ணமான புரம் என்றால் பஹுளமான (அதாவது பெரியதான) துரிதமென்னும் தோஷங்களால் நிறைந்த பெரிய ப்ரஹ்மபுரம் இந்தத் தேஹம் என்று வேடிக்கையாக ஸ்வாமி காட்டுகிறார். சரீரத்தைப் புரமென்று சொல்லும்பொழுது 'நவத்வாரே புரே தேஹீ' என்கிற கீதா வசநமும் ஜ்ஞாபகத்திற்குவர, அநேகமான துரிதங்கள் (அல்லது தோஷங்கள்) தாராளமாய் உள்ளே நுழைவதற்கு அநேக பெரிய வாசல்களை உடையது என்றும் காட்டுகிறார்.

'சேதநனுடைய கர்த்ருத்வம் பராயத்தமானால், இவனுக்கு ஸ்வாதந்தர்யம் இல்லாமல் போகுமாதலால், ஈச்வரனால் செய்விக்கப்படும் இவன் கர்மங்களுக்கு இவனுக்குப் பலம் கொடுக்க ந்யாயமில்லையே' என்று ஆக்ஷேபம் வர, இவன் செய்யும் ப்ரயத்நத்தை அபேக்ஷித்து, பரமாத்மா அநுமதி கொடுத்து இவனை ப்ரவர்த்திப்பிப்பதால், இவனுக்கு ஸ்வாதந்த்ரியத்துக்குக் குறைவில்லை. 'ஸ்வயந்த்ருதஜேஷித:' என்று தடுக்கப் படாத வ்யாபாரத்தை உடையவனென்று சொல்லுகிறது. ஒருவன் காலில் விலங்குபோட்டு ஓடக்கூடாமல் கட்டிவிட்டு, ஓடுவதற்கு ஸ்வாதந்த்ரியமில்லாத அவனை ஓடு என்று கட்டளை இடுவது போல், ஸ்வாதந்த்ரிய மில்லாதவனைக் கர்மங்களைச் செய்யென்று சொல்லும் ச்ருதி ஸ்ம்ருதி ரூபமான ஆஜ்ஞைகள் வ்யர்த்தமாகும் என்கிற ஆக்ஷேபம் அதிகரணஸாராவளியில் கூறப்பட்டது. துரிதங்களால்

லாம் கண் காது முதலிய த்வாரங்களால் உள்ளே விச்ருங்கலமாய் நுழையவே ஹ்ருதயத்துக்குள் உள்ள அங்குமிங்கும் பல திக்குகளாக இழுக்கும் இந்த்ரியங்களாகிய மந்த்ரிகளால் தங்கள் தங்கள் விஷயங்களில் அங்குமிங்கும் இழுக்கப்பட்டுக் குறைக்கப்படுகிறான். இந்த்ரியங்கள் மந்திராலோசனை சொல்லும் ஸசிவர்கள். 'ஸசிவர்' என்ற பதத்தால் ஸ்வபுத்தியில்லாத ஸசிவாயத்த ஸித்தியான அரசனை த்ருஷ்டாந்தமாகக் காட்டுகிறது. 'க்லீப:' என்று ஸ்வயம் பும்ஸ்த்வ மில்லாத புத்திக்குறைவான அரசனைச் சொல்லுகிறது. பும்ஸ்த்வம் குறைந்தாலும் இந்த்ரியங்களாசை ஏறுமே ஒழிய, குறையாதென்றும் காட்டுகிறது. இரண்டு ஸபத்நிகளின் கலஹத்தால் ஈச்வரன் ஸங்கடப்படுவதாக முன்பு சொல்லப்பட்டது. இங்கே அநேக மந்த்ரிகளால் அவரவர்களுக்குத் தோன்றியபடி அவரவர்களுக்கு வேண்டிய விஷயங்களில் இழுக்கப்பட்டுத் திண்டாடுவதைச் சொல்லுகிறது. பாகவதத்தில் ஏகாதசத்தில் 'ஜிஹ்வைகத:' என்கிற ச்லோகம் இங்கே ஸ்மாரிதம். அந்த ச்லோகத்தின் முடிவில் அநேக ஸபத்நிகளைப் போல் கேஹபதியைத் துன்பம் செய்கிறார்கள் என்று கூறியதை அநுஸரித்து இங்கே நரபதி என்று சொல்லியது.

'இந்தத் தேகம் காமாக்நி க்ரோதாக்நி முதலியவற்றால் மண்டி எரிந்து கொண்டிருப்பதால், நெருப்பினால் சூழப்பட்ட க்ருஹத்திலிருப்பது போல், இந்தத் தேக வீட்டில் இருத்தல் பெரிய ஆபத்தென்றும், தீப்பட்ட வீட்டிலிருந்து வெளியே ஓட த்வரிப்பதுபோல் இந்தத் தேஹத்திலிருந்து தப்பித்துக்கொண்டு ஓடினால் தான் க்ஷேமமென்று நினைத்து ஏன் ஓடவில்லை?' என்று ஸுமதி கேட்கிறாள். இங்கே தீப்பட்டுப் பற்றி எரியும் வீடாக தேஹத்தைச் சொன்னது மிகவும் அழகு. 'ஜநாகீர்ணம் மந்யே ஹுதவஹபரீதம் க்ருஹமிவ' என்று சாகுந்தளத்தில் கண்வ சிஷ்யர்களில் ஒருவன், ஜநங்களால் நிறைந்த புரத்தை அக்நியால் சூழப்பட்ட வீட்டுக்கு உபமாநமாகச் சொன்னான். மற்றொரு சிஷ்யன், ஸ்நாநம் பண்ணுபவனும் சுசியா யிருப்பவனும் ஸ்நாநம் பண்ணும விருப்பவனையும் அசுசியா யிருப்பவனையும் வெறுப்பது போல், தான் நாகர ஜநங்களைக் கண்டு வெறுப்பதாகச் சொன்னான். பட்டணத்தைத் தீப்பற்றி எரியும் வீடு என்று சொன்ன ஆச்ரம வாஸிக்குத் தன் தேஹமே தீயினால் சூழப்பட்ட வீடென்று உணர்ச்சியில்லையே என்று ஸ்வாமி காட்டுகிறார். சாகுந்தளத்தில் 'ஹுதவஹபரீதம் க்ருஹமிவ' என்று சொன்ன வார்த்தைகளை அநுஸரித்து இங்கே 'ஹுதவஹவேஷ்டிதம் க்ருஹமதஇவ' என்று கூறப்பட்டது. ஸ்நாநம் பண்ணினால் தேஹத்தின் அசுத்தி போய்விடும் என்று சொன்னவனுக்கு நாகாநந்தத்தில் ஜீமூதவாஹநர் கூறியபடி, ஸர்வாசுசிகளுக்

கும் இந்தச் சரீரம் நிதானமென்பது தெரியவில்லையே என்று அநுதாபம் தோன்றுகிறது. ஸுமதியின் சங்கைக்கு இந்தத் தேஹத்தின் அநந்த தோஷங்கள் ஒன்றேனும் தெரியாமல் "புண்ணை மறைய வரைந்து என்னைப்போர வைத்தாய் புறமே" என்பதுபோல் விசித்ரமாக இந்தத் தேஹத்தையமைத்து ஈச்வரன் மயக்குகிறபடியால் இதன் தோஷம் தெரியாமல் இதில் போக புத்தி உண்டாகிறது என்கிறார். ஈச்வரன் என்னும் சில்பி, தன்னுடைய ஸர்வஜ்ஞத்வம் ஸர்வசக்தித்வம் ஐச்வர்யம் முதலிய ஆறு குணங்களால் ஏற்படும் சில்ப ஸாமர்த்யம் முழுவதையும், ஸகல அசுத்திகளாலும் நிறைந்த இந்தத் தேகத்தைப் பழுதில்லாததுபோலும் அழகுபோலும் காட்டி அமைக்கிறன். அந்தச் சில்பியின் சித்ரமெழுதும் சலாகை ஸத்வ ரஜஸ் தமஸ்ஸென்கிற மூன்று வர்ணமான குணமுடையது. சில்பியினுடைய குணம் மூவிரண்டு ஆறுகும். ஆறு குணத்தில் ஜ்ஞாநத்தையும் சக்தியையும் சேர்த்திருப்பதைக்கொண்டு தன் ஜ்ஞாநம் சக்தி முழுவதையும் இந்தத் தேஹமென்னும் சித்ரத்தை அமைப்பதில் விநியோகப்படுத்தினுன் என்று பாவம். 'சித்ரா ஷோடஸவ்ருத்தி:' என்கிற ப்ரமாணத்தை அநுஸரித்து இங்கே சித்ர சப்தம். இந்தத் தேஹமென்னும் முக்குணமான அத்புத சித்ரம் சுத்த ஸ்படிகம் போன்ற ஆத்மாவால் சுமக்கப்படுகிறது. இந்த ஆத்மா அச்சேத்யமாய் இருந்தாலும் கண்ணாடிச் சுவருக்குள் சித்ரம் தெரிவதுபோல் ஸ்படிகம் போன்ற இந்த ஆத்மாவையும் தேஹத்தையும் ஒன்ருக நினைக்க இடம் உண்டாகிறது. மூன்று விதமான வர்ணங்களால் சித்ரம் அமைவது போல், மூன்றுவித ஆசைகளால் தேகத்தில் அபிமாநம் உதிக்கிறது.

(தொடரும்.)

---

'பட்டர் ராமாவதாரத்திலே போர பக்ஷபதித்திருப்பர்' என்று ஜீயர் அருளிச்செய்யுமது கேட்கைக்காகச் சிறியாத்தான் ஒரு நாள், "பெருமாளுக்கு எல்லா நன்மைகள் உண்டாகிலும், கழுத்திலே ஓலைகட்டி 'தூது போ' என்னப்போன க்ருஷ்ணன் நீர்மை இல்லையே" என்ன, "அது அங்ஙனல்ல காண்; கழுத்திலே ஓலை கட்டி 'தூது போ' என்பார் இல்லாமை தவிர்ந்தாரத்தனை காண்" என்று அருளிச் செய்தார். அபிஷிக்த க்ஷத்ரிய குலத்திலே பிறக்கையாலே போக விடுவாரைப் பெற்றதில்லை.

ஸ்ரீ:

# வேதாந்த பாரிஜாத ஸௌரபமும் ஸ்ரீ நிம்பார்க்காசார்யரும்.

[ஸ்ரீ. உ.ப. வித்வான் தட்டை. ஸ்ரீநிவாஸாசார்யர், திருச்சி]

உஂஷ்டாவிஹாவிஂகவநிஹஂரதயாஂவஜ
நியஂமுதஹகுஹரஂஉயஹ்யுஹயாஸகாஸ ।
உஂஉஂராஞதெஂதஂவதிஸிஸஂரதெஹபைஸ
விஂயுஂஸாஂதம கஂவிவஂஸஂஷெஸிஂஹஂபெ ॥

‘க்ருஷ்ண த்வைபாயநம் வித்தி வ்யாஸம் நாராயணம் ப்ரபும்’ என்று பகவதவதாரமாக உலகத்தில் புகழப்படுகிற ஸ்ரீவேதவ்யாஸ மஹர்ஷியினால் இயற்றப்பட்டிருக்கிற ப்ரஹ்ம ஸூத்ரத்திற்குப் பற்பல மகாசார்யர்கள், தங்கள் தங்கள் புத்தி பரிபாகத்திற்கும் அபிநிவேசத்திற்கும் தக்கவாறு பற்பல பாஷ்யங்களைச் செய்திருக்கின்றன ரென்பது எல்லாராலும் அறியப்பட்டதே. அவற்றுள் தத்காலம் பாரத பூமியில் படன பாடனங்களிலும் ப்ரசாரத்திலுமிருந்து வருவது ஐந்தாறு பாஷ்யங்களே. ஸித்தாந்தங்களாகப் பலரென்று தோன்றி மறைந்து போய்க்கொண்டே இருப்பது மூன்று நான்கு பாஷ்யங்கள். எல்லாம் சாரீரக மீமாம்ஸா பாஷ்யங்களென்று வ்யவஹரிக்கப்படுகின்றன. ‘சாரீரக’ பதத்திற்கு வ்யுத்பத்தி எப்படி என்று வினவப்படுமேயாகில், அது பின் வருமாறு கண்டறியத்தக்கது. அதாவது: சிதசித்துக்களால் நிறைந்த ஜகத்தைச் சரீரமாக உடையவன் சாரீரன்; பரமாத்மா. அந்தப் பரமாத்மாவை அதிகரித்து ப்ரவ்ருத்தித்த சாஸ்த்ரம் சாரீரகம். அல்லது சாரீரனைப் பரமாத்மாவை (காயதி) சொல்லுகிறது. [கை—கை—ஶப்தே] ‘ஆதோऽநுபஸர்கே க:’ என்கிற ஸூத்ரத்தினால் க ப்ரத்யயம் வருகிறது. ‘க்’ என்கிற அம்சம் லோபித்து ‘அ’ மாத்ரம் மிஞ்சுகிறது. இந்த ப்ரத்யயம் வந்தவுடன் ‘கா’ என்று விகாரமடைந்திருந்த ‘கை’ தாதுவானது ஈற்றிலுள்ள ஆகாரத்தை இழந்து விடுகிறது. சாரீரக ரூபம் இவ்விதம் நிலைபெறுகிறது. அல்லது ‘குத்ஸிதம் ஶரீரம்—ஶரீரகம்’ அதன் ஸம்பந்தம் பெற்றிருத்தலால் சாரீரகன் ஜீவாத்மா. அந்த ஜீவாத்மாவை அதிகரித்துச் செய்யப்பட்டிருக்கிற சாஸ்த்ரம் சாரீரகீய மென்னப்படும். ‘அதிக்ருத்ய க்ருதே க்ரந்தே’ என்கிற

ஸூத்ரத்தால் சைஷிகமான 'छ' ப்ரத்யயம் வருகிறது. இந்த ப்ரத்யயமானது 'वृद्धाच्छः' என்கிற ஸூத்ரத்தால் அதற்கு 'ईय' என்கிற ஆதேசம் வந்தால் சாரீரகீயம் என்றே ரூப மேற்படவேண்டும். பாணினீய வ்யாகரண ப்ரக்ரியை இவ்வாறு இருக்க, எல்லோரும் சாரீரக சாஸ்த்ர மென்று வழங்குவது எப்படி யுக்தமாகுமென்று கேட்கப்பட்டால், ப்ரதிபாதக சாஸ்த்ரத்திற்கும் ப்ரதிபாத்ய வஸ்துவுக்கும் அபேதத்தைக் கருதி சாஸ்த்ரத்திற்குச் சாரீரக வ்யபதேசமென்று சாப்திகர்கள் கூறுகின்றனர். ஆனால் இந்த மூன்றாவது பக்ஷத்தில், அர்த்தத்தில் அஸ்வாரஸ்ய மிருக்கிறது. அதாவது வேதாந்த சாஸ்த்ரம் ஜீவாத்மாவை ப்ரதிபாதிக்கிறதென்று ஏற்பட்டதே ஒழிய, பரமாத்மாவை ப்ரதிபாதிக்கிற தென்கிற முக்யமான அர்த்தம் இழக்கப்பட்டதாக ஆகிறது. இந்த விஷயத்தில் அறிஞர்கள் ஒரு வித ஸமாதானம் கூறுகின்றனர். அதாவது 'व्युत्पत्त्या शब्दसंसिद्धिः; अर्थनिश्चयस्तु लोकतः'. சப்தாநுசாஸந சாஸ்த்ரத்தினால் பதம் உள்ளபடி ஸித்தமாகிறது. அர்த்த நிச்சயமானது உலகத்தாருடைய ப்ரயோக பரிபாடியினால் ஏற்படத்தக்கது. ஆகவே ப்ரயோஜக வ்ருத்தர்கள் இந்தச் சாரீரக சப்தத்தை பரமாத்ம பரமாகவே வழங்குவதால் இதுதான் இதற்குப் பொருள். வஸ்துதஸ்து இது தக்க ஸமாதாந மாகாது. மேலே எழுதப்படுவதுதான் இதற்குத் தக்க ஸமாதாந மாகும். அதாவது: 'अनेन जीवेनात्मनानुप्रविश्य नामरूपे व्याकरवाणि' என்கிற நாம ரூப வ்யாகரண ச்ருதியினால் பரமாத்மாவுக்கு ஸ்வபர்யந்தமாக நாம பர்யாய சப்த வாச்யத்வம் ஸித்தித்திருப்பதாலும், 'यस्य पृथिवी शरीरम्', 'यस्यात्मा शरीरम्' என்கிற அந்தர்யாமி ப்ராஹ்மணத்தால் சித்துக்கள் அசித்துக்கள் எல்லாவற்றுக்கும் ப்ரஹ்மாத்மகத்வம் ஸித்தித்திருப்பதாலும், அப்ருதக் ஸித்த விசேஷண வாசக சப்தங்களுக்கு விசேஷ்ய பர்யந்தமாக அர்த்தத்தைப் போதிக்கும் ஸ்வபாவ மிருப்பதாலும், சரீரவாசக சப்தங்களுக்குச் சரீரி பர்யந்தம் அர்த்தத்தை உணர்த்திவைக்கும் ஸ்வபாவ மிருப்பதாலும், ஜீவாத்ம வாசகமாக இருக்கிற சாரீரக சப்தமானது வேதாந்த ஜ்ஞாநத்தால் வ்யுத்பத்தியின் பூர்த்தியைப் பெற்றவர்களுக்குப் பரமாத்ம பர்யந்தமாகவே அர்த்தத்தை உணர்த்துகிறது.

இந்த விஷயமானது 'शास्त्रदृष्ट्या तूपदेशो वामदेववत्' என்கிற ஸூத்ரத்தால் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. மீமாம்ஸா சப்தம் விசார மென்கிற அர்த்தத்தை அறிவிக்கிறது. ப்ரஹ்ம விசார பரமான பாஷ்ய மென்பது இதன் திரண்ட பொருள். இந்த ப்ரஹ்ம ஸூத்ரங்களுக்கு உபவர்ஷரால் ப்ரஹ்ம ஸூத்ர வ்ருத்தியும், கௌடபாதாசார்யரால் காரிகா ரூபமான சாரீரக ஸூத்ர பாஷ்யமும், பாஸ்கராசார்யராலும் யாதவ

ப்ராகாசராலும் சங்கராசார்யராலும் அத்வைதபரமான பாஷ்யங்களும் வேற்கெனவே செய்யப்பட்டிருக்கின்றன, ஸ்ரீகண்ட சிவாசார்யரால் சக்தி விசிஷ்ட சிவாத்வைத பரமான பாஷ்யமும் செய்யப்பட்டிருக்கிறது. அத்வைத சைவ ஸௌராதி பேதங்களால் பாகுபாடுள்ள பற்பல பாஷ்யங்கள் இந்த ஸூத்ரங்களுக்கு ஏற்பட்டிருக்கின்றனவென்பது வேதாந்த விசாரத்தில் ப்ரவ்ருத்தித்தவர்களுக்கு நன்கு விளங்கும். போதாயநர் டங்கர் த்ரமிடர் குஹதேவர் ப்ரஹ்மநந்தி முதலிய மஹாபுருஷர்களால் வைஷ்ணவ பரமான ப்ரஹ்ம ஸூத்ர பாஷ்யங்கள் செய்யப்பட்டிருந்தனவென்பது ஸ்பஷ்டமாக க்ரந்தங்களால் அறியப்படுகிறது. இந்த ஸமயத்திலோ அவைகள் நாம மாத்ர சேஷங்களாக ஆய்விட்டன. அந்தப் பூர்வாசார்யர்களுடைய ஸத்ஸரணியைப் பின் பற்றியே செய்யப்பட்டுள்ள வைஷ்ணவ பரமான பாஷ்யங்கள் தற்காலத்தில் ஐந்து, ப்ரசாரத்திலிருந்து வருகின்றன. அவற்றுள் ப்ரதாநதமமானது ஸ்ரீ பகவத் ராமாநுஜ ப்ரணீதமான ஸ்ரீ பாஷ்யம். அடுத்தது ஆநந்த தீர்த்த ப்ரணீதமான த்வைத பாஷ்யம். அடுத்தது ஸ்ரீக்ருஷ்ண சைதந்யரால் செய்யப்பட்டுள்ள சைதந்ய சந்த்ரோதய பாஷ்யம். அடுத்தது விஷ்ணு ஸ்வாமி ஸம்ப்ரதாயத்தை அநுஸரித்த வல்லபாசார்யருடைய பாஷ்யம். அடுத்தது நிம்பார்க்காசார்யரால் செய்யப்பட்டுள்ள வேதாந்த பாரிஜாத ஸௌரபமென்கிற சாரீரக மீமாம்ஸா பாஷ்யம். பவிஷ்ய புராண பரிசிஷ்டத்தில், ‘விஷ்ணுஸ்வாமீ [illegible] நிம்பாதித்யோ த்விதீயக:। [illegible]। நிம்பார்க: [illegible]’ என்று இதற்கு ப்ரமாணம் கண்டு கொள்ளத்தக்கது. இந்த நிம்பார்க்காசார்யருடைய பெருமையையும் வேதாந்த சாஸ்த்ர பரிஜ்ஞாநத்தையும் ப்ராசீந க்ரந்தங்களில் காணலாம். இந்தப் பாஷ்யம் அநேகமாக ஸ்ரீபகவத் ராமாநுஜ பாஷ்யத்தையே தத்வ நிரூபண விஷயத்திலும் அர்த்த ப்ரதிபாதநத்திலும் அநுஸரித்திருக்கிறது; ஆனால் மிக்க சுருக்கமாயுள்ளது. இதை ப்ரஹ்மஸூத்ர வ்ருத்தி என்றே சொல்லலாம். ப்ரமேய பாகங்கள் [illegible] எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. இவர் மஹாவிஷ்ணு பக்தர்; ஸாத்விக தேவதையான ஸ்ரீமந் நாராயணனே பரதத்வமென்று கோஷித்திருக்கிறார். இந்தப் பாஷ்யமானது ஸ்ரீபகவத் ராமாநுஜாநுக்ருஹீதமான வேதாந்த ஸாரம் போல் சுருக்கமாக ஸூத்ரார்த்தங்களைத் தெளியச் சொல்லும் திறமை வாய்ந்துள்ளது. சிற்சில இடங்களில் ஸூத்ராக்ஷரங்கள் எவ்வளவோ அவ்வளவுதானென்று சொல்லக் கூடியதாய்ப் பரிமிதமான பாஷ்பாக்ஷரங்கள் இருக்கின்றன. சப்த ஸங்கோசத்திலும் அர்த்த விவரணத்திலும் தனக்கு இருக்கும் ஸாமர்த்யத்தை க்ரந்த ரசநாசைலியினால் துலக்கமாகக் காட்டியிருக்கிறார். இந்த விஷயங்களைப் பிந்தி ஸவிஸ்தாரமாகக் காட்டுவோம்.

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸ்தாபகர்களாக அவதரித்திருந்த ஆழ்வார் ஆசார்யர்கள் போலவே இவரும் பகவதம்சத்தால் அவதரித்தவர் என்று ப்ரஸித்தி. இவர் ஸுதர்சநமென்கிற சக்ரராஜனுடைய அவதாரமென்று அந்த மதஸ்தர்கள் கூறுகின்றனர். 'யத்யத்விபூதிமத்ஸத்வம் ஸ்ரீமதூர்ஜிதமேவ வா। தத்ததேவாவகச்ச த்வம் மம தேஜோம்ஶஸம்பவம்' என்கிற ஸ்ரீ கீதாசார்யனுடைய திவ்ய ஸூக்தியைச் சிரஸா வஹிக்கிற ஸ்ரீ வைஷ்ணவ ஸாமாந்யத்திற்கு ஜ்ஞாத்ரு குலதிலகராய் விளங்குகிற இந்த மஹானை அவதார புருஷரென்று சொல்வதிலும் இவரைப் புகழ்வதிலும் என்ன ஆக்ஷேபம் இருக்கிறது? இவருடைய பாஷ்யத்தையும் இவருடைய ஸூத்ரார்த்த நிரூபண பங்கியையும் ஒரு தடவை ஆமூலாக்ரம் பார்த்தவர்களுக்கு, சிற்றறிவுள்ள தாஸன் சொல்லவேண்டுவது ஒன்றும் இராது. ஸநகர் முதலிய ப்ரஹ்ம புத்ரர்களுக்கு ப்ரஹ்ம ஜ்ஞாந தாநம் பண்ணுவதற்காக ஹம்ஸரூபியாக அவதரித்து அவர்களுக்கு நேரில் தோன்றி, ப்ரஹ்ம ஜ்ஞாநோபதேசம் செய்யத் தொடங்கும் தருணத்தில் தேவர்ஷியான நாரதர் ஜ்ஞாந த்ருஷ்டியினால் தெரிந்து அங்கு வந்ததாகவும், அவருக்குச் சிஷ்யனாக நிம்பார்க்காசார்யரும் அவரைப் பின் தொடர்ந்துவந்த தாகவும் ஐதிஹாஸிகர்கள் கூறுகின்றனர். இவர் 'அருணி' என்னும் மஹர்ஷிக்கு ஜயந்தீ தேவியினிடத்தில் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் திருவாழியின் அம்சத்தால் ஜநித்தவர். இந்த மஹா புருஷனுக்கு ஸ்ரீ பாஷ்யகாரருக்கு ஸ்ரீவத்ஸாங்க மிச்ரர்போல அந்தரங்க சிஷ்யராக இருந்தவர் ஸ்ரீநிவாஸ பாரதீ தீர்த்தர். இவர் பாஞ்சஜந்யாம்சமாக அவதரித்தவரென்று அந்த ஸம்ப்ரதாயஸ்தர்களின் கொள்கை. இவர் ஆஜாநஸித்தமான க்ருஷ்ண பக்தியுள்ளவர். தம் வாழ்நாளுள்ள வரையிலும் க்ருஷ்ணனையே ஆராதித்து வந்தவர். வேறு தேவதா மூர்த்திகளை மனத்தாலும் இவர் நினைப்பதில்லை. அக்காரணத்தினால் இவர் பக்தி ஸாகரரென்று அழைக்கப்பட்டு வந்தார். பிறகு ஒருக்கால் இவர் தம்முடைய ஆச்ரமத்தை வந்து நாடின ஒரு ஸந்யாஸியை ஸாஷ்டாங்கமாக ப்ரணாமம் செய்து, 'நான் ஆஹ்நிகங்களைச் செய்து முடித்துக்கொண்டு கண்ணனை ஆராதித்து வைச்வதேவம் செய்து அதிதி ஸத்காரம் செய்வது வழக்கம். என் பாக்ய விசேஷத்தால் மஹாந்களான தங்களை இன்று அடைந்தேன். என் க்ருஹத்தில் இன்று பிக்ஷை செய்யவேண்டும்' என்று ப்ரார்த்தித்தார். அந்த ஸந்யாஸியானவர் இவர் பக்தியையும் வைதிக கர்ம ச்ரத்தையையும் பரீக்ஷிக்க எண்ணங் கொண்டவராய், 'எனக்கு இன்ன இன்ன போஜ்ய வஸ்துக்

களை நீர் பக்வம் செய்து பிக்ஷை பண்ணி வைப்பீரேயாகில் உம்முடைய க்ருஹத்தில் பிக்ஷை வாங்கிக்கொள்வேன்' என்றார். அவர் சொன்ன போஜ்ய வஸ்துக்கள் எளிதில் கிடைக்க முடியாமல் இருந்ததினால் அங்குமிங்கும் ஓடிப் பதார்த்தங்களை நெடுநேரம் தேடி ஸம்பாதித்துப் பக்வம் செய்யும்படி மனைவிக்கு ஆஜ்ஞை இட்டு, தான் ஆஹ்நிகங்களைச் சரிவரச் செய்து, கண்ணனை ஆராதித்து வைச்வதேவ கர்மாவைச் செய்து முடிப்பதற்குள் ஸாயாஹ்நமும் ஏறக்குறைய முடிவடைகிற ஸமயமாக இருந்தது. உடனே ஸந்யாஸியைப் பிக்ஷை வாங்கிக்கொள்ள வேண்டினார். அவர், 'ஸாயங்காலமாய்விட்டது; ஸூர்யனும் அஸ்தமயத்தை அடைகிறான்; நான் பிக்ஷை வாங்கமாட்டேன்; இன்று உம்மால் எனக்கு உபவாஸம் ஏற்பட்டது' என்று சொல்லவே பக்திஸாகரர் மனக் கலக்கமுற்று, தனக்கு ஆராத்ய தேவதையாக இருக்கிற கண்ணனை ப்ரார்த்தித்தார். உடனே பகவான் தன் ஸுதர்சநமென்கிற சக்ரத்தை அஸ்தகிரியின் சிகரத்தில் ஸூர்யன்போல் ஒரு நாழிகை ஜ்வலிக்கச் செய்தார். அதைக் கண்டு உள் மகிழ்ந்து ஸந்யாஸியை அழைத்துவந்து, தன் வாஸ க்ருஹத்திலுள்ள ஒரு நிம்ப வ்ருக்ஷத்தின் மேல் அவரை ஏறச் செய்து தானும் கூட ஏறி, அஸ்தகிரி சிகரத்தில் ஸூர்யனைக் காட்டி, அந்த ஸந்யாஸியைப் பிக்ஷை வாங்கிக்கொள்ளும்படி செய்து, அவரை த்ருப்தி அடையச் செய்வித்தார். இவருடைய பகவத் பக்தியினால் பரமாநந்த மடைந்த அந்த த்ரிதண்டியானவர் மிக்க ஆச்சர்யமடைந்து, 'போ! பக்திஸாகரரே! யாதொரு காரணத்தால் நீர் நிம்ப வ்ருக்ஷத்தின் மீதேறி அஸ்தமித்த அர்க்கனைத் திரும்பிவரச் செய்து எனக்குக் காட்டிப் பிக்ஷை பண்ணிவைத்து த்ருப்தியை உண்டுபண்ணீரோ, அக்காரணத்தால் நீர் 'நிம்பார்க்காசார்யர்' என்று ப்ரஸித்தியை அடையப்போகிறீர்' என்று அநுக்ரஹித்தார். அந்தக் காரணத்தால் பக்திஸாகர ரென்று பெயர் வாய்ந்திருந்த அவர், பிறகு நிம்பார்க்காசார்யராக ஆனார் என்று அறிஞர்கள் பகர்கின்றனர்.

(தொடரும்.)

---

ஸ்ரீ:

# இரண்டாந் திருவந்தாதி.

(உரையாசிரியர்:—ஸ்ரீ. உப. வித்வான் வை. மு. கோபாலக்ருஷ்ணமாசார்யர்)

61. நின்றதோர் பாத நிலம்புதைப்ப நீண்டதோள்
சென்றளந்த தென்பர் திசையெல்லாம்—அன்று
கருமா ணியாயிரந்த கள்வனே யுன்னைப்
பிராமணித் தார்பெற்ற பேறு.

(இ—ள்) நின்றது-இருந்ததான, ஓர் பாதம்-(உனது) ஒரு திருவடி, நிலம் புதைப்ப-பூமிப்பரப்பையெல்லாம் மறைத்துக்கொள்ள, நீண்ட தோள்-(மகாபலியினிடம் வேண்டியதைப் பெற்றதால் தோன்றிய மகிழ்ச்சிப் பெருக்கால்) வளர்ந்து வளர்ந்த (உன்னுடைய) தோள், திசை எல்லாம்-எல்லாத் திக்குக்களிலும், சென்று-பரவிப்போய், அளந்தது-வியாபித்து நின்றது, என்பர்-என்று(அறிஞர்)கூறுவர்; அன்று-(இந்திரன் கண்ணுங் கண்ணீருமாய் உனது திருவடிகளில் வந்து விழுந்த) அன்றைக்கு, கரு மாணி ஆய்-கறுப்பு நிறமுள்ள பிரமசாரியாகி, இரந்த-யாசித்த, கள்வனே-(அந்தப் பலியின் ஸர்வ சொத்துக்களையும்) கவர்ந்த கிரித்திரிமனே! (பாத்துவ குணம் மாறிச் சௌலப்பிய குணத்தை மேற்கொண்டு மகாபலியினிட மிருந்த பூமியை நீ கவர்ந்து கொண்ட இது), உன்னை—, பிரமாணித்தார்-நம்பி யிருக்கின்ற அடியவர், பெற்ற அடைந்த, பேறு-பாக்கியமாகும்; (எ—று.)

கீழ்ப் பாசுரத்தில் ஆச்ரித பாரதந்த்ர்யமே எம்பெருமானுக்கு ஸ்வரூப மென்றார். அப்படி அநுஷ்டித்துக் காட்டினமையை இப்பாசுரத்தில் எடுத்துக் காட்டுகின்றார். எம்பெருமான் தன்னை யழியமாறியும் ஆச்ரித கார்யத்தைச் செய்வது, சரணமடைந்தவர் 'எவ்வகையாலும் எம்பெருமான் நம்மைக் காப்பாற்றுவன்' என்று நம்பி நிர்ப்பராயிருத்தற்கு ஏதுவாகுமென்பார் 'உன்னைப் பிரமாணித்தார் பெற்றபேறு' என்றார்.

62. பேறொன்று முன்னறியேன் பெற்றறியேன் பேதைமையால்
மாறென்று சொல்லி வணங்கினேன்—ஏறின்
பெருத்தெருத்தங் கோடோசியப் பெண்ணசையின் பின்போ
யெருத்திறுத்த நல்லாயரேறு.

(இ—ள்) 'ஏறின்-(ஏழு) எருதுகளினுடைய, எருத்தம்-நுசுப்பும், கோடு-கொம்பும், ஒசிய-முறியும்படி, பெண் நசையின்-(நப்பின்னை பிராட்டி யென்னும்) பெண்மணியினிடத்துள்ள விருப்பத்தால், பின் சென்று-தொடர்ந்து போய், எருத்து-(அந்த ரிஷபங்களின்) கழுத்தை, இறுத்த-திருகிப் போகட்ட, நல் ஆயர் ஏறு- (தன்னேடொத்த பருவத்தை யுடைய) அழகிய ஆயர்கட்குத் தலைவனான கிருஷ்ணன், மாறு-(நம்முடை தீவினைகட்கு) மாறுவன்' என்று சொல்லி—, வணங்கினேன்- (அந்தப் பிரானை) வணக்கத்தோடு ஆச்ரயித்தேன்; முன் (இதற்கு) முன்னே, பேறு ஒன்று-(இப்படி யிருக்கிற) புருஷார்த்த மென்று ஒன்றையும், அறியேன்-உணரவும் பெற்றிலேன்; (அதனால்), பெற்று அறியேன்- (இத்தனைக் காலம் அந்தப் புருஷார்த்தத்தைப்) பெற்று அநுபவிக்க மாட்டாமல் இழந்துபோனேன்; (இதற்குக் காரணம்), பேதைமை-(என்னுடைய) அறிவு கேடேயாகும்; ஆல்-(என் பேதைமை இருந்தபடி) என்னே! (எ—று.)—அறிவுகேடு எப்படிப் பட்ட தீம்பையும் விளைக்கு மென்க.

ஆச்ரித பரதந்த்ரனான எம்பெருமானே என்னுடைய ப்ரதிபந்தகங்களைப் போக்கி, என் விருப்பத்தையுந் தருவானென்று இப்போது அறிந்து அவனைப் பற்றினே னென்கிறார், இதில்.

63. ஏறேழும் வென்றடர்த்த வெந்தை யெரியுருவத்
தேறேறி பட்டவிடு சாபம்—பாறேறி
யுண்டதலை வாய்நிறையக் கோட்டங்கை யோண்குருதி
கண்டபொருள் சொல்லிற் கதை.

(இ—ள்) எரி உருவத்து-அக்கினிபோன்ற (பார்ப்பதற்கு உக்கிரமாகத் தோன்றுகிற)ரூபத்தையுடையவனாக, ஏறு ஏறி-ரிஷபத்தை வாகனமாகக் கொண்டு நடத்துபவனான சிவன், பட்ட-அடைந்ததும், இடு-(பிரமதேவனால் 'நீ என் தலையைக் கொய்ததனுற் கபாலியாவாய்' என்று) இடப்பட்டதுமான, சாபம்-சாபத்தாலே (கையிலே யொட்டிக்கொண்ட), பாறு ஏறி உண்ட-பருந்துகள் மேல்விழுந்து உண்ட, தலை-தலையோடு, வாய் நிறைய வாயளவும் நிறைந்து (சுக்கலாய் வெடித்துக் கையினின்று) விழுந்திடும்படி, ஏறு ஏழும்-ஏழு ருஷபங்களையும், வென்று அடர்த்த [அடர்த்து வென்ற]-எதிரிட்டு ஜயித்த, எந்தை-என்னுடைய ஸ்வாமியானவன்,—கோடு அம் கை-வளைந்த அழகிய (தன்) கையினாலே (தன் மார்பைக் கீறி அங்குநின்று வாங்கித்)தெறித்த, ஒண் குருதி-அழகிய இரத்தத்தாலே, கண்ட-செய்த, பொருள்-இவ்வர்த்தத்தை சொல்லில்-சொல்லத் தொடங்கினால், கதை-ஒரு பெரிய, மகாபாரதமாக முடியும்; (எ—று.)

இதனால், அஹங்காரியான ருத்ரனுடைய தாபத்தைப் போக்குகை யாலும் அந்தப் பெருமானே ஆச்ரயித்தற்கு உரியவ னென்பதை யறியலா மென்கிறார். சிவன் தான் பட்ட பாட்டை நினைந்தால் 'இனி ஈசுவரனென்று பேர் வைத்துக்கொள்ளவும் வேண்டா, பாதகியாகித் திரிந்து அலையவும் வேண்டா' என்ற விஷயம் இந்தப் பாசுரத்தில் வெளியாகும். அவதாரத்தின் மெய்ப்பாட்டாலே குருதி யென்றாரேனும், அப்ராக்ருதமான பகவானது திருமேனியினின்றுந் தோன்றியதாகையாலே அடிக்கழஞ்சு பெறுமென்பார் அதற்கு 'ஒண்' என்ற அடைமொழி கொடுத்தார். பாதகத்தைப் போக்க வல்லதாகையாலே 'அங்கை' என்றது.

64. கதையின் பெரும்பொருளுங் கண்ணா நின் பேரே
யிதைய மிருந்தவையே யேத்தில்—கதையும்
திருமொழியாய் நின்ற திருமாலே யுன்னைப்
பருமொழியாற் காணப் பணி.

(இ—ள்) கண்ணா-ஸர்வ சுலபனானவனே! கதையின்-(உன் வைப வத்தைக்) கதைபோலே பரக்கத் தெரிவிக்கிற புராண இதிஹாஸங்களிலே சொல்லப்படுகிற, பெரும் பொருளும்-பரந்த விஷயங்களும், இதையம் இருந் தவையே ஏத்தில்-(அவற்றின்) கருத்தின் உண்மையான தன்மைகளை யறிந்து துதிக்கத் தொடங்கினால், நின் பேரே-உன் திருநாமங்களேயாம்; கதையும்-(உபநிஷத் ஸித்தமான முப்பத்திரண்டு வித்தைகளினாலும்) கதை போலே (குணஞ் செயல்கள்) பரக்கப் பேசப்படுகிற, திருமொழி ஆய் நின்ற-சிறந்த சப்தங்களுக்கு உட்பொருளாய் நிற்கிற, திருமாலே-ஸ்ரீயப்பதியே! உன்னை—,(சப்தத்தின் மூலமாக அறியாமல் நேரே கண்டு), பரு மொழியால்-சிறந்த சப்தங்களைக் கொண்டு, காண-அநுபவிக்கும்படி, பணி-திருவுள்ளம் பற்றவேணும்; (எ—று.)

தாமே ஈசுவரரென்று செருக்கித் திரியுமவர்க்கும் உதவுகின்ற நீ, உன்னாலல்லது செல்லாத அநந்யகதிகனான நான், ச்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸ புராணாதிகளால் உன் மகிமையை யறிவதோடு நில்லாமல், தேச விசேஷ மாகிய பரமபதத்தை யடைந்து 'ஸதா பச்யந்தி' என்கிறபடியே எப்போது மாகச் சேவித்து, அந்தப் பரிபூர்ணாநுபவத்தில் தோன்றிய பெருமகிழ்ச்சிக் குப் போக்குவீடாக "அஹமந்நம் அஹமந்நம், அஹமந்நம்" என்று பரிபூர்ண மான சப்தங்களைச் சொல்லிக்கொண்டு அநுபவிக்குமாறு திருவுள்ளம் பற்ற வேணு மென்கிறார். கதையும்—பெயர்ச் சொல்லி னடியாகப் பிறந்த பெய ரெச்சம். கதையும்—இதிஹாஸாதிகளாற் கூறப்படுகிற எனினுமாம். முத லடியில் 'கதையும்' என்று பாடங் கொள்வாரு முளர்.

65. பணிந்தேன் றிருமேனி பைங்கமலங் கையா
லணிந்தேனுன் சேவடிமே லன்பாய்த்—துணிந்தேன்
புரிந்தேத்தி யுன்னைப் புகலிடம்பார்த் தாங்கே
யிருந்தேத்தி வாழு மிது.

(இ—ள்) (சுவாதந்திரியத்தாலே தலை வணங்காதவனான நான்), திருமேனி-(உன்னுடைய) அழகிய திருமேனியை, பணிந்தேன்-(கண்டு வேரற்ற மரம் போலே சுவரூபத்திற்கு ஏற்பப்) பணிபவனானேன்; அன்பு ஆய்-(உனக்கு அடிமை செய்தாலல்லது தரித்திருக்க முடியாத) அன்பை யுடையவனாய்க்கொண்டு, உன்-(சேஷியான) உன்னுடைய, சேவடி மேல்-சிவந்த திருவடிகளில், கையால்—, பை கமலம்-வாடாத தாமரை மலரை, அணிந்தேன்-அழகுபெறச் சாத்தினேன்; புரிந்து-(உன் முன்புறத்தைத் தரிசித்து அங்குற்ற வடிவழகைக் கண்டு) மனம் விரும்பி மகிழ்ந்து, ஏத்தி-துதித்து, புகல் இடம்-(நீ) புக்கருளுகிற இடத்திலே, பார்த்து-(உன்னுடைய பின்னழகைக்) கண்டு, ஆங்கே இருந்து-(அவ்விடத்தை விட்டு வர முடியாமையால்) அங்குத்தானே யிருந்து, ஏத்தி-(உன்னுடைய இவ்வழகு எப்போதும் மாறாமற் செல்லவேணு மென்று) வேண்டி, வாழும்-(இப்படி மங்களாசாஸனம் பண்ணி) வாழுகையாகிற, இது-இப்புருஷார்த்தத்தையே, துணிந்தேன்-(என்னுடைய பேறாக) நிச்சயித்தேன்; (எ—று.)

'பருமொழியாற் காணப்பணி' என்று வேண்டினவாறே 'ஆழ்வீர்! இப்போது உமக்கு நாம் செய்யவேண்டுவது ஒன்று உண்டோ? நீர் எல்லாம் பெற்றீரன்றோ?' என்று எம்பெருமானுக்குத் திருவுள்ளமாக, எம்பெருமானால் தாம் பெற்ற லாபத்தை யநுஸரித்து அதற்கு ஏற்பப் பேசுகின்றாரென்க. இனி, புகலிடம் என்பதற்கு—அவதாரஞ் செய்து பின் எழுந்தருளு மிடமென்று கொண்டு, ஸ்ரீவைகுண்டமென்று பொருள்கூறி, ஸ்ரீவைகுண்டத்திலிருக்கும்படியைப் பார்த்து, அங்கே "சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே" என்கிறபடியே இருந்தேத்துகைதானே வாழ்வாகத் துணிந்தேனென்றுமாம்.

66. இது கண்டாய் நன்னெஞ்சே யிப்பிறவி யாவ
திதுகண்டா யெல்லாநா முற்ற—திதுகண்டாய்
நாரணன்பே ரோதி நரகத் தருகணையாக்
காரணமும் வல்லையேற் காண்.

(இ-ள்) நல் நெஞ்சே-('இந்தப் ப்ரபஞ்ச வாழ்க்கை பொல்லாது' என்றால் அதற்கு இசைந்து என்னோடு ஒரு தன்மைப்பட்டு நிற்கையாகிற) நன்மையையுடைய மனமே! (நிலையானதென்றும் போக்யமானதென்றும் ஸம்ஸாரி

கள் மாறாக நினைக்கிற), இ பிறவி ஆவது-இந்தப் பிறவி யென்பது, இது கண்டாய்-அல்ப அஸ்திவாரத்தோடிது கூடினதாகுங் கண்டாய்; எல்லாம்-அனாதியாகக் கழிந்த காலமெல்லாம், (நன்றானதென்று மயங்கி), நாம்—, உற்றது-துன்பத்தை அனுபவித்தற்குக் காரணமாயிருந்தது, இது கண்டாய்—இந்தப் பிறவியாகும் கண்டாய்; நாரணன்-(வகுத்த சேஷியான) நாராயணனுடைய, பேர்- (குணம் முதலியவற்றிற்கு வாசகமான) திருநாமங்களை, ஓதி-நிரந்தரமாகச் சொல்லி, நரகத்து—(இந்த ஸம்ஸாரமாகிற) நரகத்தினுடைய, அருகு-சமீபத்திலும், அணையா-சேராமைக்கு ஏற்ற காரணமும், இது கண்டாய்-(அல்பாஸ்திரத்வங்களாதியான தோஷத்தினாலே விடத்தக்கது என்னும் இதனை ப்ரத்யக்ஷீகரிக்கும்படி இருக்கிற) இந்த ஜந்ம ஸம்பந்தம் கண்டாய்; (மேலெழுந்தவாறு தோன்றுகின்ற நன்மைபாற் பயனில்லை;உள்ளூறப் பார்த்தால் இந்தப்ரபஞ்சத்தின் வடிவம் குற்றமே யென்ற இதனை), வல்லை ஏல்-காணவல்லமையுடையையாயானால், காண்-(நான் சொன்னது சரியாகுமென்று)கண்டறிவாய்; (எ—று.)

எம்பெருமானைக் கிட்டுதற்குப் பகவத் ப்ராவண்யத்தைப் பெற்று அவனையே யத்துகை,அத்துணை வேண்டுவதன்று. அப்பரமனைக் கிட்ட வொட்டாமற் செய்கின்ற நம்முடைய ப்ரதிபந்தகம் போகுமாறு இந்த ப்ரபஞ்ச வாழ்க்கையிலுண்டான குற்றங்களைக் கண்டு இதில் அருசி பிறத்தலே வேண்டுவதென்கிறார்.

67. கண்டேன் திருமேனி யான்கனவி லாங்கவன்கைக்
கண்டேன் கனலுஞ் சுடராழி—கண்டேன்
உறுநோய் வினையிரண்டு மோட்டுவித்துப் பின்னும்
மறுநோய் செறுவான் வலி.

(இ—ள்) யான்-(நிர்ஹேதுகமாக எம்பெருமானால் திருவருள் செய்யப்பட்ட) யான், (இந்திரியத்தால் பிரதியட்சமாகக் காணுதலின்றி,) கனவில்-கனவிற் கண்டாற் போல்கின்ற ஸ்வாநுபவ தசையிலே, திருமேனி-(அப்பெருமானது) திருமேனியை, கண்டேன்-கண்டனுபவிக்கப் பெற்றேன்; ஆங்கவன்-அப்படிப்பட்ட அழகையுடைய அவனுடைய, கை-திருக்கையிலே, கனலும்-(பகைமேலே) சீறுபாறென்று நின்றுள்ள, சுடர் ஆழி-ஒளி வடிவான சக்கராயுதத்தை, கண்டேன்—; உறு நோய்-அநுபவித்தே தீர வேண்டியனவாய் நோய் போலே துன்பந்தருவனவான, வினை இரண்டும்-(புண்ணியம் பாவம் என்கிற) இரண்டு கர்மங்களையும், ஓட்டுவித்து-தூரத்தி விட்டு, பின்னும்-மேலும், மறு நோய்-மறுகிளை கிளர்ந்து வரக்கூடிய நோய்

போன்ற வாஸநாருசிகளையும், செறுவான்-அழிப்பவனான அந்த எம்பெருமானுடைய, வலி-மிடுக்கையும், கண்டேன்—; (எ—று.)

கீழ்ப் பாசுரத்தில், தமது உள்ளத்தை நோக்கி 'ஸம்ஸார தோஷத்தைக் காணாய்' என்ன, பின்பு எம்பெருமான் நிர்ஹேதுகமாகத் திருவருள் செய்தமை தோன்ற அவ்வம்சத்தில் தாம் பெற்றவற்றை இதிற் பேசுகிறார். பின்னிரண்டடிகளால், துன்பந் தரக்கடவனவான புண்ய பாபங்களை வாஸநாருசிகளோடு ஒழிக்கும் எம்பெருமானுடைய மிடுக்கைக் கண்டேனென்றவாறு. செறுவான் வலி யென்றமையால், செற்றவலி யென்பது பெறப்படும். கனவிற் காண்கையாவது—'ஆத்மாவுக்கு நித்ய தர்மமான ஜ்ஞாநம் ப்ரத்யக்ஷிக்கைக்கு ஆணைத்தாளான மநஸ்ஸாலே புறப்பட்டுப் பாஹ்யேந்த்ரியங்களாலே காண்கையன்றிக்கே "ஸ்வப்நதீ கம்யம்" என்கிறபடியே மநஸ்ஸாலே காண்கை' என்பர் பெரியோர்.

68. வலிமிக்க வாளேயிற்று வாளவுணர் மாள
வலிமிக்க வாள்வரைமத் தாக—வலிமிக்க
வாணாகஞ் சுற்றி மறுகக் கடல்கடைந்தான்
கோணாகங் கொம்பொசித்த கோ.

(இ—ள்) வலி மிக்க வாள் எயிறு வாள் அவுணர்-வலிமை மிகுந்தவரும் ஒளியுள்ள கோர தந்தங்களை யுடையவருமான வாட்படையை யுடைய அசுரர்கள், மாள-இறந்து படும்படி, வலி மிக்க வாள் வரை மத்து ஆக-(தன்னை நெருக்கினபோதும் பிதிர்ந்து போகாமல்) உறுதிப்பாடு மிக்கிருந்த ஒளிவிடுகிற மந்தர பர்வத்தை மத்தாகக் கொண்டு, வலி மிக்க வாள் நாகம் சுற்றி-நெடும்போது வலவாய் இடவாயாகச் சுற்றிக் கடையுமளவிலும் அற்றுப் போகாதபடி) வலிமை மிக்கதும் (மலையோடு தேய்ப்புண்கையாலே) ஒளியை விடுவதுமான (வாசுகியான) பாம்பைக் (கடைகயிறாகச்) சுற்றி, மறுக-கலங்கும்படி, கடல்-திருப்பாற் கடலை, கடைந்தான்-கடைந்தருளியவன்,—கோள் நாகம்-கொல்லுந் தன்மையைக் கொண்ட (குவலயாபீட மென்ற) யானையின், கொம்பு-தந்தத்தை, ஒசித்த-முறித்துப் போகட்ட, கோ-ஸர்வ ஸ்வாமியாவன்; (எ-று.)

கடைந்தானே கோ என்க. கீழ்ப் பாசுரத்தில் இரு வினைகளையும் வாஸனையோடு போக்குமவன் எம்பெருமானென்றார். 'அவனைக் கொண்டு தமது ஜந்மத்தைப் போக்க வழிதேடாதே உப்புச் சாறு கொண்டு அகலுவதே!' என்று அந்தத் தேவர்களின் தன்மையைச் சொல்லி, விரோதியைப் போக்கித் தம்மை யெழுதிக் கொண்டவனென்று அருளிச் செய்கிறார் இதில்

வாள்-ஒளியும் ஒருவகை ஆயுதமும். வாட்படையைச் சொன்னது, மற்றை ஆயுதங்கட்கும் உபலட்சணம். மாளக் கடைந்தான் என இயையும். கடைந்து அமுதங் கொண்டது, அவுணர்களைத் தேவர்கள் வெல்லுதற்குக் காரணமாதல் காண்க. நாகம்—பாம்பும், யானையும். கோள்-மிடுக்குமாம்.

**69.** கோவாகி மாநிலங் காத்துநங் கண்முகப்பே
மாவேகிச் செல்கின்ற மன்னவரும்—பூமேவும்
செங்கமல நாபியான் சேவடிக்கே யேழ்பிறப்புந்
தண்கமல மேய்ந்தார் தமர்.

(இ—ள்) கோ ஆகி-தலைமைபெற்று, மாநிலம்காத்து-பரப்பையுடைய பூமியை (ச்சிறியதைப் பெரியது நலியாதபடி)பாதுகாத்து,நம் கண் முகப்பே மா ஏகி செல்கின்ற-நமது கண்ணெதிரிலே குதிரையினால் நடந்து போகின்ற, மன்னவரும்-அரசர்களும்,—பூ மேவும்-அழகு பொருந்திய, செம் கமலம்-சிவந்த தாமரைப் பூவை, நாபியான்-நாபியிலே யுடையவனான ஸர்வேச்வரனுடைய, சே அடிக்கே-சிவந்த திருவடிகளிலே, ஏழ் பிறப்பும்-ஏழு வகைப்பட்ட பிறவிகளிலும், [பல ஜந்மங்களிலும்], தண் கமலம்-குளிர்ந்த தாமரைப் பூவை, ஏய்ந்தார்-சாத்தி ஆராதித்தவரான, தமர்-பக்தரேயாவர்; (எ-று.)

கீழ்ப் பாசுரத்தில் எம்பெருமானைப்பற்றித் தேவர்கள் அமிருதம் பெற்றுப்போனதை யநுசந்தித்தார்; இந்தப் பாசுரத்தில், இங்குள்ள அரசர்களும் அவ்வெம்பெருமானை ஆச்ரயித்தே ஐசுவரியம் பெற்றாரகளென்கிறார். ஏய்ந்தார் தமர் என்பதற்கு—ஏய்ந்தாருடைய தமரென்றுமாம். பூமேவுஞ் செங்கமல நாபியான் என்பதை, செங்கமலப்பூ மேவும் நாபியான் என்று கூட்டி யுரைப்பினுமாம். இங்கே, எம்பெருமானை, 'பூமேவுஞ் செங்கமல நாபியான்' என்றது-எல்லார்க்குங் காரணபூதன் அவனே யென்கைக்காக. ஏகுதல்-நடத்தல். 'மாவேறி' என்று திருத்தி யுரைப்பாருமுளர். கமலத்தைக் கூறினது, மற்றை மலர்கட்கும் உபலட்சணம். 'பூவேகுஞ் செங்கமல நாபியான்' என்ற பாடத்துக்கு, மற்றை மலர்கள் தோற்றுப்போகுஞ் செவ்வியையுடைய கமலத்தை நாபியிலே கொண்டவனென்று பொருள் காண்க.

**70.** தமருள்ளந் தஞ்சை தலையரங்கந் தண்கால்
தமருள்ளுந் தண்பொருப்பு வேலை—தமருள்ளு
மாமல்லை கோவல் மதிட்குடந்தை யென்பரே
யேவல்ல வெந்தைக் கிடம்.

(இ—ள்) தமர் உள்ளம்-ஆச்ரிதருடைய ஹ்ருதயமும், தஞ்சை-தஞ்சைமாமணிக் கோயிலும், தலை அரங்கம்-(திருப்பதிகளெல்லாவற்றிலும்) ப்ரதானமான ஸ்ரீரங்கமும், தண்கால்-திருத்தண்காலும், தமர் உள்ளும் தண்

பொருப்பு-ஸ்ரீவைஷ்ணவர்கள் (தம்முடைய ஸர்வஸ்வமாக) நினைத்திருக்கிற ச்ரமஹரமான திருமலையும், வேலை-திருப்பாற்கடலும், தமர் உள்ளும் மா மல்லை-ஆச்ரிதரான புண்டரீகரிஷி முதலாயினோர் (தங்களுக்கு உத்தேச்யமாக) நினைத்திருக்கின்ற (ஸ்தல சயநமான) திருக்கடல் மல்லையும், கோவல்-திருக்கோவலூரும், மதிள் குடந்தை-மதிள் வலிமை பெற்றுள்ள திருக்குடந்தையும், (ஆகிய இவைகளெல்லாம்), ஏ வல்ல-(பகைவரை நசிக்குமாறு) அம்பினால் வீழ்த்தவல்ல, எந்தைக்கு-என் ஸ்வாமியான சக்கரவர்த்தித் திருமகனுக்கு, இடம்-வாஸஸ்தாநமாகும், என்பர்-என்று (அறிவுடையோர்) சொல்லுவார்கள்; (எ—று.)

தமர்-அநந்ய ப்ரயோஜநராய்த் தன்னை ஆச்ரயித்தவர். தமருள்ளத்தை முதலிற் சொல்லி, பிறகு தஞ்சை முதலியவற்றைச் சொல்லி, இவை எந்தைக்கு இட மென்கையாலே, ஆச்ரிதருடைய திருவுள்ளம் ஒருதட்டும், உகந்தருளின நிலங்கள் ஒரு தட்டுமாக எம்பெருமான் கொண்டுள்ளானென்றவாறாயிற்று. இனி, இந்தப் பாசுரம்-தன்னிடத்து அன்பு பூண்டவர்க்கு அப்பரமன் ஸேவை ஸாதிக்கும்படி ஸாந்நித்தியத்துடனிருக்கும் இடம் இன்னவை யென்பதைக் காட்டும் என்பாரு முண்டு.

**71.** இடங்கை வலம்புரிநின் றார்ப்ப வெரிகான்
றடங்கா ரொடுங்குவித்த தாழி—விடங்காலுந்
தீவா யரவணைமேற் றோன்றல் திசையளப்பான்
பூவா ரடிநிமிர்த்த போது.

(இ—ள்.) (பரிவின் மிகுதியால்), விடம் காலும்-விஷத்தை உமிழ்கின்ற, தீ வாய்-கொடிய வாயையுடைய, அரவு-திருவனந்தாழ்வானாகிற, அணைமேல்-படுக்கையின்மீது (சாய்ந்தருள்கின்ற), தோன்றல்-(ஸௌகுமார்யம் மிக்கவனான) பெருமான், திசை அளப்பான்-(காடும் ஓடையுமான) திக்குக்களோடு கூடின பூமியை அளக்கைக்காக, பூ ஆர் அடி-மலர் போன்ற (ஸௌகுமாரமான) திருவடிகளை, நிமிர்த்த-வளர்த்தருளின, போது-காலத்தில்,—இடம் கை-இடத் திருக்கையிலே, வலம்புரி-ஸ்ரீபாஞ்சஜந்ய மென்கிற வலம்புரிச் சங்கானது, நின்று ஆர்ப்ப-ஒருபடிப்பட்டு நின்று ஆரவாரிக்க, ஆழி-(ஸுதரிசனமென்ற) திருச்சக்கரமானது, எரி கான்று-நெருப்பை உமிழ்ந்து, அடங்கார்-(நமுசி முதலிய) பகைவரை, ஒடுங்குவித்தது-முடங்கப் பண்ணுவித்தது; (எ-று.)

கீழ்ப் பாசுரத்தில், ஸர்வேசுவரன் உகந்தருளின நிலங்களை யருளிச்செய்த ஆழ்வார் இந்தப் பாசுரத்தினால் அவ்வெம்பெருமானை யுகந்தவர்கள் அஸ்தாநே பயசங்கை பண்ணும்படியை யருளிச்செய்கிறார். கீழ் எம்பெருமான் படியை யருளிச்செய்து, இங்குத் ததீயர்படியை யருளிச்செய்கிறாரென்க.

ஸ்ரீ:

# உபாகர்ம விஷயம்.

[ஸ்ரீ. உ.ப. வித்வான் மதுராந்தகம் கருடபுரம் தி. ஈ. ஸ்ரீநிவாஸாசார்யர்.]

---

“ [illegible] ।

[illegible] ॥ ”।

“ உபாகர்ம ததோத்ஸர்கம் கார்யோத்ஸவாஷ்டகா: । மாஸவ்ருத்தௌ பரே குர்யாத் வர்ஜயித்வா து பைத்ருகம் ॥” இந்த வசநம் தசநிர்ணயத்தில் எடுக்கப்பட்டிருக்கிறது. கண்டபூஷணத்தில் இந்த வசநத்தை எடுத்து ‘இதம் ப்ரதமோபாகர்மவிஷயம்—ஸர்வவிஷயமித்யந்யே, ஶுத்தமாஸஸம்பவாதஸ்யாபி ச்ராவணத்வாச்ச’ என்று வைதிகஸார்வபௌமர், உபாகர்மத்தை மலமாஸம் வரும்போது சுத்தமாஸத்தில் பண்ணவேண்டியதென்னும் விதி, ப்ரதமோபாகர்மத்தைச் சொன்னபடி; ஸர்வோபாகர்ம விஷயமென்றும் சிலருடைய அபிப்ராயம். சுத்தமாஸம் ஸம்பவிக்கிறதாகையாலும் அதுவும் ச்ராவணமாயிருக்கையாலும்’ என்று உத்தரத்தில் எல்லாரும் அநுஷ்டிக்கிற விஷயத்தில் உபபத்தியும் காட்டியிருக்கிறார். ‘குருபார்கவயோர்மௌட்யே பால்யே வா வார்த்தகேऽபி வா । ததாऽதிமாஸஸம்ஸர்ப்ப மலமாஸாதிஷு த்ரிஷு । ப்ரதமோபாக்ருதிர்ந ஸ்யாத்’ என்று குரு சுக்ராஸ்தமயத்திலும் அவர்கள் பால்ய வார்த்தகங்களிலும் அதிமாஸ ஸம்ஸர்ப்ப மலமாஸங்களிலும் ப்ரதமோபாக்ருதி கூடாதென்று விசேஷித்து நிஷேதித்திருப்பதால் ஸாமாந்ய உபாகர்ம சப்தம் ப்ரதமோபாகர்ம ரூபவிசேஷத்தைச் சொல்லுவதாய், த்விதீயாதி உபாகர்மங்களுக்கு மலமாஸம் தோஷமாகாதென்கிறது ந்யாயஸித்தமானாலும், அதற்காக ‘ஸிம்ஹதர்ஶாத்து யா பூர்வா பூர்ணிமா ஸா ச்ராவணீ பவேத் । தஸ்யாமேவோபாக்ருதிம் குர்யாத் ஸிம்ஹஸ்தோऽர்க்கோ பவேந்ந வா ॥’ என்று குறிப்பிட்டு ஸிம்ஹ தர்சாத்பூர்வ பௌர்ணமாஸீ காலத்தை ஸர்வஸாதாரணமாக ப்ரமாணம் காட்டியிருக்க, த்விதீயாதிகளை மலமாஸத்திலேயே பண்ணவேண்டுமென்று மலமாஸ ம்ருத ப்ரதமாப்திக விஷயத்தில் போல இதற்கு வசநமில்லாததாலும், த்விதீயாதிகளுக்குச் சுத்தமாஸத்தில் நிஷேதமாவது காணப்படாததாலும் சுத்தமாஸ ஸம்பவாத் தத்ரைவாநுஷ்டாநம் யுக்தமென்று பாவத்தாலேயே சிலர் நிர்ணயத்தை ஸோபபத்திகமாகத் தோழப்பர் அநுவதித்திருப்பதாலும், ப்ரதமோபாகர்மபரம் இதி ப்ரதம யோஜநை. முக்ய காலமான சுத்த ச்ராவணம் ஸம்பவியாதபோது ஆத்யேதரங்களுக்கு மாத்ரம் மலமாஸம் பாதகமாகாதென்று தாத்பர்யத்தால் உபபந்நமாகையாலும், அவிபாகேந சுத்தாநுஷ்டாநம் ஸர்வோபாதேயமாய்த் தோன்றுகிறது. ஆனால் ‘யாருக்கு

சுத்தச்ராவணத்தில் ஸம்பவியாமல் மலமாஸத்தில் பண்ணநேரிடும்?' என்று கேள்வி உண்டாகலாம். ஒருவனுக்குத் தேஹாஸ்வாஸ்த்யத்தாலோ ஆசௌசத்தாலோ ஸிம்ஹ தர்சாத் பூர்வ பௌர்ணமி அதிக்ராந்தமாய் மல பாத்ரபதம் சுத்த பாத்ரபதம் இரண்டு வரும்போது பாத்ரபதமும் கௌண காலமே யாகையால் முக்ய ச்ராவணமாஸம் அதீத மாய் விட்டதால் சுத்த பாத்ரபத ப்ரதீக்ஷையால் விளம்பமின்றிக்கே மல பாத்ரபத மாஸத் திலேயே ஆத்யேதரங்களைப் பண்ணிவிடலாம். ஆத்யோபாகர்மத்தை மாத்ரம் அப்போ தும் சுத்த பாத்ரபதத்திலேயே பண்ணவேணும்; அதற்கு நிஷேதமிருப்பதால் என்று தாத்பர்யம். ஸம்ஸர்ப்பாதிமாஸ மலமாஸங்களென்று संहिताव्याहृत उदाहृतमासं என்னும் பதம் क्षयमासावरुद्धाख्यं स्याद्यद्यपि त्र्यमासवर्षात्यन्त मासत्रयक மாகையால் அது வ்ருச்சிகாதி த்ரயத்திலே ஸம்பவிக்குமே தவிர அந்ய மாஸங்களில் வாராதாகையால் தத் பூர்வமாஸத்துக்கே ஸம்ஸர்ப்பமென்று வைத்தியநாதீ யாதிகளில் சொல்லியிருப்பதால், அவை ச்ராவணாநந்தர பாவிகள் என்று நிச்சிதமானால், ஸாஹசர்யத்தால் அதிமாஸ-ஸம்ஸர்ப்பத்திலும் வரக்கூடியதானாலும் श्रावणानन्तर भाविहान्द्रपदाद्यधिक மாஸங்களையே விவக்ஷித்து, அதில் ப்ரதமோபா க்ருதியை நிஷேதித்ததால், அதில் த்விதீயோபாக்ருதிகளுக்கு அநுஜ்ஞை ப்ராப்தமாய் உபபந்நமாகும்போது கண்ட பூஷணத்தில் சாமச்ருதமான அந்யதா ஸித்தார்த்தகமான ப்ரதமோபாகர்ம பரமென்கிற வாக்யமாத்ரத்தைக் கொண்டு உபக்ரமத்திலிருக்கும் 'सिंहस्थे सवितरि पौर्णमासी श्रावणी; तस्यां प्रावाचनं तैत्तिरीयकाः कुर्युः' என்கிற தைத்திரீயக ஸர்வோபாகர்ம ஸாதாரண கால போதக வாக்யத்தை மல ச்ராவணவத் வத்ஸரத்திலும் அந்தக் காலம் ப்ராப்தமாயிருக்க, ப்ரதமோபாகர்ம பரமாக ஸங்கோசிப்பித்து த்விதீயாதிகளை ப்ருதக்கரித்து அநவகா சாவச்ய கர்மங்களுக்கு மாத்ரம் அநுஜ்ஞாதமான மலச்ராவணத்திலேயே நடத்த வேண்டுமென்கிற நிர்ப்பந்தத்துக்குக் கமகம் ஒன்றும் ஏற்படவில்லை. 'सावकाशानि यानि स्युः न कुर्यात्तानि मलिम्लुचे' [சுத்த மாஸத்திலும் அவ காசமுள்ளவைகளை மலத்தில் பண்ணவேண்டா] என்று நிஷேதமும் இருக் கிறது. 'स्पष्टमासविशेषाख्य विहितं वर्जयेन्मले' [ஸ்பஷ்டமான மாஸ விசேஷத்தின் பெயரை எடுத்து அதில் விஹிதமெதுவோ அது மலத்தில் கூடாது] என்று காடக ச்ருஹ்ய வசநம் ஸ்ம்ருதி முக்தா பல ச்ராத்த காண்டத்தில் உதாஹரிக்கப்பட்டது. ஆகையால் 'श्रावण्यां पौर्णमास्यां' என்கிற வாக் யம் மலமாஸம் ச்ராவணமாக இருந்தாலும் சுத்த ச்ராவணத்தையே குறிக்கிறதாகையால், மலச்ராவணத்தில் அநுஷ்டாநம் ப்ராப்தமாகாது. 'संक्रान्तेष्वपि कर्तव्यमाब्दिकं मासिकं तथा । सपिण्डीकरणं चैव वत्सरादर्वागाब्दिकम् ॥' என்கிற வசநத்தால் ஸாபிண்ட்ய கரணத்துக்கு மல மாஸத்தில் அநுஜ்ஞை யிருந்தாலும் அது வத்ஸராந்த விஷயம் என்று வ்யவஸ்தை ஸுதீவிலோசநத்தில் பண்ணப்பட்டது 'क्षयाहप्रतिवार्षिकं नित्यं नैमित्तिकं तथा' इति सङ्ग्रहकारोक्तेः सकृद्धि साविण्यं मासेऽप्याकृष्टसंहवेषि मासत्रयोक्तमेव सर्वमासे कुर्यात्' इति सुदर्शनाचार्योक्तं(?) तथाहि उदाहृता

ந-ஜ்ஞாத கர்மங்களும் நிரவகாசங்களே. அதில் கர்த்தவ்யங்களே தவிர ஸாவகாசங்களைச் சுத்த மாஸத்திலேயே பண்ண வேண்டுமென்று ஸார்வ பௌமாபி ப்ராயம் தெரிகிறது. உபாகர்மத்திலும் அந்த ந்யாயம் துல்ய மாகையாலிறே. 'ஶ-ஜாவ ஸம்ஹவாத்தவஶ்ராவிஶ்ராவணகவாஷ்' என்றும் இங்கும் ஸங்கட விஷயத்தில் ப்ராப்தாநுஷ்டாநத்தை விஷயீகரித்த பூர்வ யோஜனையில் காட்டில் யதோக்தாநுஷ்டாந ப்ரதிபாதகமான நிஷ்கர்ஷத்தையும் கதிவய நிபந்த நகார ஸ்த்ரதிவர்ஜஶ-உந உ-வெ,ந ப்ரதிபாதித்தது. தத வனவ 'உவாகஉ-ஜணி ஶாஸ்தைெ-உ வெத்த காயெ-உ தயாஷீகெ। ஜாதகெ நாஉகாணெ ஸீஉஞெ வாஸிகஉ-ஜணி॥ பாஶ்ரெ வா வாயு-உகெ வாவி உளஜெ வா ம-ஶாபா-க்ரயொஃ। ஸம்ஸவ-ஜாஷிஷா ஶைதாநி ஶொஷாநீவி ந வஶ்யதி॥ ந ஶொஷாய ஹவெத்கஉ-உ கத-உவ்யம் விபிஶொஷிதம்।' இத்யாதி அநவகாச கர்மங்களோடுகூட எடுக்கப்பட்ட 'உபாகர்ம' பதமும் அதீத முக்ய காலத்தையுடைய உபாகர்ம பரமாகவாவது சில நிபந்தநங்களில் ஸிம்ஹ ஹஸ்தத்தையே காலமாக விதிக்கப்பட்ட சந்தோகோபாகர்ம பரமாகவாவது ஸிம்ஹ மாஸத்திலேயே வ்யவஸ்தித நஉ-உஶொத்தாஶெபீயொவாகஉ-உ பரமாகவாவது யோஜிக்கப்படுவது உசிதம். ச்ராவணம் உச்த காலமாக இருக்க மலமாஸ தோஷம் த்விதீயாதிகளுக்கு இல்லையென்றும் சொல்லியிருக்க 'வ்ரஜாதி க்ரஉம் வர்தவாயாவஹம்' என்னும் யுக்திகளும் ப்ரத்யய விஷயமன்று. 'க்ருஷ்யணம் ஶாஷி க-ய-ஜாகி' என்று விதி யிருக்க, துலாமாஸத்திலேயே ப்ரதம பர்வத்திலேயே எல்லாரும் நடத்தவேண்டுமென்றும், வ்ருச்சிக பர்வத்தில் விளம்பித்துப் பண்ணுகிறவர்களுக்கு ப்ராயச்சித்தமும் கண்டதில்லை. 'மஹ-ஜாஷெஷ- ப்ராஹ்மண உவநயீத' என்று விதி இருப்பதால் கர்ப்பாஷ்டம வர்ஷ ப்ரதம திநத்திலேயே அநுபநீதனாய் அந்த ஸம்வத்ஸரத்துக்குள் உபநயநம் ப்ராப்தமாகும்போது பச்சாத் காலத்தில் போல் ப்ராயச்சித்த பூர்வகாநுஷ்டாநத்தையும் பார்க்கிறோமில்லை. வசநங்களையும் நிபந்தநங்களையும் பராமர்சித்தால் தைத்திரீயோபாகர்மத்துக்கு கஹஷி வ்ரபஜவிஶாயெ ச்ராவண மாஸாதிக்ரமம் கூடாதென்று ஏற்படுகிறதே தவிர, ஆத்யேதரோபாகர்மங்களுக்கு மாத்ரம் மல ஶ்ராவண ஸம்ஹவெ அதுவே காலம், அதை விட்டு சுத்த ச்ராவணத்தை அவலம்பிப்பது ப்ரத்யவாயகரமென்றும் காணப்படவில்லை. விசாரித்தால் ப்ராசீநமாக பூயஸாமாசாரமும் அப்படியில்லை. அநேக கண்டாரப்தவ்யமானாலும் விஹித கால விஷயத்தில் ஏக கண்டர்களாய்ச் சுத்த க்ராஹிகளாகவே உபாகர்மத்தை அநுஷ்டித்தார்களென்று அறியப்படுகிறது. ஸாவகாசமான உபாகர்மத்தை மல ச்ராவணத்தில் கர்த்தவ்யமென்கிறதும், நிரவகாச தீபோத்ஸவத்தைப் பௌமவாரதோஷமென்று த்யஜித்து நிர்நிமித்தமாக அநுஷ்டிப்பதும் நிர்நிபந்தநமென்று நிகமிதமாயிற்று.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீநரஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

# ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் வார்ஷிக மஹா ஸங்கம்.

## வேலூரில் நடந்த ஸபை விவரம்.

சென்னை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் 19-வது வார்ஷிகமஹா ஸங்கம் இவ்வர்ஷம் சென்ற ஆனிமீ 26, 27-ந்தேதிகளில் (ஜூலை 9, 10) 'கங்கையிற் புனிதமாய' காவேரி நதி தீரத்தில் துலங்கும் வேலூர் அக்ரஹாரத்தில் ஸ்ரீ சரண்யன் திருவுள்ளம் உகக்க நடந்தேறிற்று. இந்த அக்ரஹாரத்தில் இதே காலத்தில் புதிதாக லக்ஷ்மீநாராயணன் அர்ச்சையில் எழுந்தருளப்பண்ணப்பட்டு மேற்படி ஸந்நிதி ஸம்ப்ரோக்ஷணமும் நேர்ந்த படியால் மஹாஸங்கம் கூடிய ஸந்நிவேசமும் வைதிக கோஷ்டியும், பாகவத ஆராதநமும் அங்கு ஏராளமாக எழுந்தருளியிருந்த ஸ்வாமிகளுக்கு அத்யந்தம் ஆஹ்லாதகரமாக விருந்தன. பகவத் ஸ்வரூப குண விபூதிகளைப் பற்றி அங்கு ஸந்நிஹிதர்களாக விருந்த பண்டித ரத்நங்களால் செய்யப்பட்ட உபந்யாஸங்கள் அத்யந்தம் ச்ருதி ஸுகமாகவும் ஹ்ருதய ஸுகமாவும் இருந்ததுடன் இரண்டு தினங்களுக்காவது சுத்த பாரமார்த்திக மனோவ்ருத்தியை உண்டுபண்ணுவதாக விருந்தன. தஞ்சை, திருச்சி, சேலம், கோயமுத்தூர் முதலிய ஜில்லாக்களிலிருந்து பல ஆஸ்திக ஸ்ரீ வைஷ்ணவர்கள் பரஸ்பரஹிதைஷிகளாக அங்கு ஸேவை ஸாதித்தனர். வித்வான்களான மஹாமஹோபாத்யாய பண்டித ரத்நம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி (மைஸூர்) 'கோஷ்டிபுரம் ஸௌம்ய நாராயணாச்சார்ய ஸ்வாமி' புத்தங்கோட்டஹம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி; காரப்பங்காடு வெங்கடாசார்ய ஸ்வாமி, கோஷ்டிபுரம் தேசிகாச்சாரிய ஸ்வாமி, உத்தமசேரி ரெங்காச்சாரியஸ்வாமி (ஸ்ரீரங்கம்) முதலிய வித்வான்கள் எழுந்தருளியிருந்தனர். மாஹாமஹோபாத்யாய பண்டித ரத்நம் ஸ்ரீநிவாஸசாரிய ஸ்வாமி இரண்டு திநங்களிலும் அக்ராசனம் வஹித்தார்.

முதல் திநத்தில் ஸபை ஆரம்பமாகும் முன்னதாக அக்ராஸநாதிபதி ஸ்வாமி! அங்கு கூடியிருந்த ஸ்ரீ வைஷ்ணவர்களாலும் வித்வான்களாலும் அந்த ஸ்வாமி ஜாகையில் பூர்ண கும்பத்துடன் வரவேற்கப்பட்டு மேளவாத்தியத்துடன் ஊர்வலமாக ஸபைக்கெனப்போடப்பட்டிருந்த பந்தலுக்கு அழைத்துச்செல்லப்பட்டார். அக்ராஸநாதிபதி ஸ்வாமியும் மற்றவர்களும் எழுந்தருளிய பின் ஸபைக் காரியதரிசி ஸ்ரீலக்ஷ்மிநரஸிம்மாசாரியர் சுருக்கமாக ஸ்வாமிகளுக்கு ஸ்வாகத நிவேதனம் விண்ணப் பித்துக் கொள்கையில் அக்ராஸநாதிபதி ஸ்வாமி ஸித்தாந்த ப்ரவசனத்தைப் பெரியதொகைங்கர்யமெனத்திருவுள்ளம்பற்றி தூரதேச யாத்ரை முதலானவற்றால் ஏற்படக்கூடிய ச்ரமத்தை

யும் பாராட்டது ஸபையில் அக்கிராஸநம் வகிக்கத் திருவுள்ளம் பற்றி எழுந்தருளியது பற்றி ஸபையின் கிருதஜ்ஞதையைத் தெரிவித்துக் கொண்டு வார்ஷிக மஹாஸங்கம் ஸம்பந்தமான ஏற்பாடுகள் செய்ய அவகாசம் குறைவாக இருந்தும் ஸ்ரீ. உ. வெ. கெ. டி. பார்த்தசாரதி அய்யங்கார் ஸ்வாமி ச்ரமத்தைப் பாராட்டாது ஸபையின் பாலுள்ள ச்ரத்தை காரணமாக ஸதஸ் ஸம்பந்தமான ததீயாராதன ஏற்பாடுகளை நடத்த முன் வந்தது பற்றி அவருக்கும் க்ருதஜ்ஞதையை விஞ்ஞாபித்துக் கொண்டார். மற்றும் ஸபையை அலங்கரித்த ஸ்வாமிகளை அவர் வரவேற்று மஹாமஹோபாத்யாய ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி அக்ராஸநம் வஹிக்கும்படியாய்ப் பிரார்த்தித்துக் கொண்டார்.

பிறகு ஸ்ரீ அஹோபிலமடம் ஸ்ரீ அழகிய சிங்கர் மஹாஸங்கத்தை அநுக்ரஹித்து அனுப்பிய பின் வரும் ஸ்ரீமுகம், ஸ்ரீ மடத்து ஆஸ்தான வித்வான் ஸ்ரீ உப புத்தங்கோட்டஹம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியால் ஸதஸ்ஸில் வாசிக்கப்பட்டு அர்த்தமும் உபந்யஸிக்கப்பட்டது.

ஶ்ரேயஸ்யே யஜ்ஞஸஸ்யே ப்ரநிஜநவிஹிதாசாரஸந்தாநமத்யே
ப்ரத்யேகம் ஸ்வே ஜநாநாம் ஸததஸுமநஸோ: ஸத்ஸதஸ்ஸாத்விகேத்யே ।
நாநாதேஶேஷு தத்த்வப்ரஹிதஸகலம் கவ்யஶாநா ஸஹேயம்
ஶ்ரீவைஷ்ணவாக்ய மஹாஸபா ப்ரஜயதி ஸமயே ஸ்வஸ்ய ஸத்ஸாஹிதப்ரதிஷ்ட்ய ॥

நாநாஶாஸ்த்ரஸம்ப்ரதாயவிததமா யேஷாம் ஸதிர்யேஷு ஸுக்ருதா:
ஸிஷாஸு: கால்ஸஸ்கௌரஸ்ஸம்ஹிதவிஹவோ யே ஸத்ஸஹவைஷ்ணவா: ।
தைவிஸ்ஸ் ப்ரவர்த்தாஸ்த்ராவநிதைரதைத்யஸ்வ ஸஞ்சாஹி:
ஶ்ரீவேத்யம் ஜயதாத் ஸஹா நிராவரா ஶ்ரீவைஷ்ணவஸ்ஸ்வா ஸ்தாபிதா ॥

ஶ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹப்ரணயகோவயதீந்த்ரேண
காருண்யபூர்வம் ஸம்ப்ராணவநிகேதநேந ।
ஸஞ்சாஹிவ்ரதவிஹரத்தயேந கடாக்ஷிதைஷா
ஸோஷீ சிரம் விஜயதாம் ஸ்ரஹஸதே: ப்ரஸாதாத் ॥

பிறகு அக்ராஸநாதிபதிஸ்வாமி ஒன்றரைமணி அவகாசம்போல் உபந்யஸித்தார். அந்த ஸ்வாமி ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்தத்தின் மஹிமையை விஸ்தாரமாகக் குறிப்பிட்டு, இந்த ஸித்தாந்தம் ஸர்வபூத தயையும் பகவத் பாகவத கைங்கர்யத்தையும் முக்கிய தர்மங்களாகக் கொண்டதென்பதும், ஸமஸ்த பிரஜைகளுக்கும் இந்த ஸித்தாந்தத்தினால் ஆநுகூல்யமேற்பட வேண்டுமென்பதே இதை ப்ரவிருத்திப்பித்த ஆசார்யர்களின் திருவுள்ளமென்றும் ஆனால் இப்பொழுது இம்மாதிரி மஹாஸங்கங்கள் மூலம் அந்த ஸித்தாந்த தத்வங்களை அறிந்து அதை ஸம்ரக்ஷிக்க வேண்டியதே முக்ய உத்தேசமாகவிருக்கிறதென்றும், தத்காலம் பொதுவாக ஜன ஸமூகத்தினுடைய ஸ்திதி அதிருப்தி

கரமாகவும் காமக்ரோத லோபம் முதலான கெட்ட குணங்கள் மேலிட்டதாகவும் இருக்கிறதென்றும், இப்பொழுது மதாநுஷ்டானத்திற்கு லோபம் பிறந்திருப்பது போல் இதற்கு முன்னதாகவும் பல காலங்களில் நேர்ந்திருக்கிற தென்றும், அக்காலங்களில் பின்னால் எப்படி ஸித்தாந்தம் ஸுரக்ஷிதமாக ஸ்தாபிக்கப்பட்டதோ அவ்விதமே இப்பொழுதும் ஸ்தாபிக்கப்படலா மென்றும், சென்னை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை இக் கைங்கர்யத்தில் ஈடுபட்டுவருவது ஸந்துஷ்டியைக் கொடுக்கிறதென்றும் எல்லா ஸ்ரீ வைஷ்ணவர்களும் இதில் விசேஷ ச்ரத்தை காட்டி ஆச்சாரியர்களின் ஆக்ஞையைப் பரிபாலநம் செய்யவேண்டு மென்றும் அந்த ஸ்வாமி ஸாதித்தார்.

பிறகு வித்வாந் ஸ்ரீ உப. கோஷ்டிபுரம் ஸ்வாமி பரம புருஷார்த்த மென்ற விஷயமாக இரண்டு மணி அவகாசம் ஒரு உபந்யாஸஞ் செய்தார். “ஸுஹிதைஷீ ஸம்ய மதநாஸ் ஸம்ஸதேவோ யதிந் த்ருதவத்யவத்யவத்தநம்। ஹரிஹஸ்த ஸ்ருதவிகா: வரஸ்வரம் த்ருயதி த்ருயாஹஸஹஸ்ரயா ஸஹிஸ்ஸதே ॥” என்னும் ஸ்ரீ யதிராஜ ஸப்ததி ச்லோகத்தை யெடுத்துக்கொண்டு இதில் ஸ்ரீ தேசிகன் ச்லேஷையால் அடக்கியிருக்கும் விசேஷார்த்தங்களையும் லௌகிக த்ருஷ்டாந்தங்களையும் வெகு ரஸமாக அந்த ஸ்வாமி யெடுத்து ஸாதித்தார். ஸ்ரீ பகவத் பாஷ்யகாரரின் திருவடிகளில் நிர் துஷ்டாளாய் நல்லெண்ணத்துடன் ஆச்ரயித்திருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்கள், ‘பேசுவார் அடியார்களென்ன தம்மை விற்கவும் பெறுவார்’ என்ற படி பரஸ்பரம் ஹிதைஷிகளாக வர்த்திக்கக்கடவர் என்ற ஸ்ரீ ஆசார்யன் திருவுள்ளத்தை அந்த ஸ்வாமி விஸ்தாரமாக தகுந்த லௌகிக உதாஹரணங்களுடன் உபந்யஸித்தார்.

பிறகு ஸ்ரீ உப. உத்தமசேரி ரெங்காசார்ய ஸ்வாமி அர்ச்சாவதார வைபவ மென்ற விஷயமாக உபந்யஸித்தார். பகவானுடைய பரவ்யூஹாதி ஸ்வரூபங்களை இந்த ஸ்வாமி யெடுத்துச்சொல்லி ஆழ்வாராசார்யர்கள் எவ்விதம் அர்ச்சையில் ஈடுபட்டிருக்கின்றன ரென்பதையும், அர்ச்சாவதாரம் எப்படி ஸர்வோபஜீவ்யமாக விருக்கிறதென்பதையும் தெளிவாக நிரூபித்தார்.

வித்வான் ஸ்ரீ உப. எ. வி. கோபாலசார்ய ஸ்வாமி (எம். எ. பி. எல்) ஸபைக்கு எழுந்தருளுவதாக ஸாதித்திருந்தும் சில அஸௌகர்யங்களால் அவ்விதம் எழுந்தருளக்கூடாமற்போகவே ஸ்ரீ தேசிகனின் வைராக்ய பஞ்சகத்தைப்பற்றி ஒரு அழகான உபந்யாஸத்தை எழுதியனுப்பி யிருந்தார். இதை வித்வான் ஸ்ரீ உப, கோஷ்டிபுரம் ஸௌம்ய நாராயணாச்சார்ய ஸ்வாமி ஸபையில் வாசித்தார். ஸ்ரீ தேசிகனின் ஸ்ரீ ஸூக்திக்கு ஸ்ரீ உப. கோபாலாச்சார்ய ஸ்வாமி ஸாதித்துள்ள விசேஷார்த்தங்கள் ஸப்யர்களால் விசேஷமாகக் கொண்டாடப்பட்டது. இத்துடன் ஸபை முதல்திநம் முடிவடைந்தது. பிறகு ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் வார்ஷிக நிர்வாகக் கூட்டம் நடை பெற்றது.

மஹாஸங்கம் மறு நாள் மத்யாஹ்நம் கூடியதும் வித்வாந் ஸ்ரீ உப. கோஷ்டிபுரம் தேசிகாசார்ய ஸ்வாமி பகவத் ஸ்வரூபகுண விபூதிகளைப்பற்றி விஸ்தாரமாக ஆசார்ய திவ்ய ஸூக்திகளைக் கொண்டு ஒரு உபந்யாஸஞ் செய்தார். பிறகு வித்வாந் ஸ்ரீ உப. புத்தங்கோட்டஹம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி ஹிந்து சந்நிகைகள்

விவாக விஷயமாகக் கொண்டுவரப்பட்டிருக்கும் சட்டங்களைக் கண்டித்துச் சில தீர்மானங்களைப் பிரேரித்து வெகு விஸ்தாரமாக ஹிந்துக்களுடையவும் முக்கியமாக ப்ராஹ்மணர்களுடையவும் விவாக விஷயத்தில் சாஸ்திர நியமம் இருக்கும் ரீதியை உபந்யஸித்தார். பல ஸ்மிருதி கர்த்தாக்களுடைய வாக்யங்களையும் அந்த ஸ்வாமி உதாஹரித்து விவாஹம் ஸ்திரிகளுக்கு ஒரு முக்கிய ஸம்ஸ்காரமாகிறதென்றும், பெண்களுக்கு எட்டாவது வயதிலேயே விவாகஞ் செய்தாக வேண்டுமென்றும், சாஸ்திரம் நியாயத்திற்கும் மனுஷ்யர்களுடைய ஸௌகர்யத்திற்கும் மாறாக ப்ரவ்ருத்திக்கக்கூடிய தல்லவென்றும், இப்பொழுது ஆதுநிகர்கள் கூறும் குறைவுகளெல்லாம் இந்த கன்னிகா விவாஹத்தினால் ஏற்படுவதல்லவென்றும், சாஸ்திர மர்யாதையை மீறி அவ்யவஸ்தையான ஆகாராதிகளாலும் அநாசாரங்களினாலுமே அத்தோஷங்களேற்படுகின்றனவென்றும் அதை நிதாநித்து அறியாது ஹிந்து தர்மத்தையே கெடுத்து விடுவதனால் தர்மலோப மேற்படுவதுடன் ஐஹிகத்தில் மனுஷர்களுக்கு அதிகத் துயரும் கஷ்டமுமே ஏற்படக்கூடுமென்றும் ஆகையால் இப்பொழுது கொண்டுவரப்படும் விவாகச் சட்டங்களை அடியுடன் அநுமதிக்கவே கூடாதென்றும், இதை வைதிக ஹிந்துக்கள் ஏகோபித்துக் கண்டிப்பதுடன் அதை நிவர்த்திப்பதான மார்க்கத்தை அவலம்பிக்கவேண்டுமென்றும் அந்த ஸ்வாமி ஸாதித்தார். பிறகு வித்வான் காரப்பங்காடு ஸ்ரீ உப வெங்கடாசார்ய ஸ்வாமி ஸ்ரீவைஷ்ணவர்களுக்குள் ஒற்றுமையென்ற விஷயமாக வெகு விஸ்தாரமாக உபந்யஸித்தார். தத்காலம் ஸ்ரீ வைஷ்ணவ ஸமூஹம் காலபேதங்களாலும் ஸம்ப்ரதாய பேதங்களாலும் சிதறுண்டு ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய ஸ்வரூபத்தையே நாசஞ்செய்யக்கூடிய நிலைமை யேற்பட்டிருப்பதுபற்றி அந்த ஸ்வாமி மிகுந்த சோகம் வெளியிட்டு இந்த வைஷம்யங்களைப் போக்க எல்லா ஸ்ரீ வைஷ்ணவர்களும் மனப்பூர்வமாக ப்ரவ்ருத்திக்க வேண்டுமென்றும் உத்தமமான ஸ்ரீ வைஷ்ணவ லக்ஷணங்களை விடுத்து ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குள் ஆசார்யர்கள் பெயரைச் சொல்லிக்கொண்டு கேவலமாகச் சண்டை செய்துகொண்டிருப்பது ஸ்ரீ சரண்யன் திருவுள்ளத்திற்காவது பரம தயாளுக்களான ஆசார்யர் திருவுள்ளத்திற்காவது ஒருக்காலும் ஒத்ததாக ஆகாதென்றும், இதனால் அவர்களுடைய நிக்ரஹமே யேற்படக்கூடுமென்றும், ஐஹிகத்திலும் இச்சண்டைகள் இதரர்களுடைய பரிஹாஸாஸ்பதமாக விருப்பதுடன் அநாவசியமான அர்த்தவ்யயம், தேகச்ரமம், த்வேஷம் முதலியவற்றை யுண்டுபண்ணுகின்றன வென்றும் ஸாதித்து ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை நிர்வாஹ ஸபையார் இந்த வைஷம்யங்களைப் போக்க ஸாத்யமான வழியில் வேண்டுமென்று ஒரு தீர்மானத்தையும் ஸபையில் பிரேரித்தார்.

இத்துடன் உபந்யாஸங்கள் முடிவடைந்ததும் அக்ராஸநாதிபதி தமது உபஸம்ஹாரத்தில் மஹாஸங்கம் ஸாத்விகமாகவும் வைதிகசோபையுடன் வெகு திருப்திகரமாக நடந்தேறியது பற்றி ஸந்தோஷித்து ஸபையும் ஸபையின் ப்ரவசன கைங்கர்யமும் வ்ருத்தியடைந்து அதன் மூலம் லோகத்திற்கு க்ஷேம மேற்படவேண்டு மென்று ப்ரார்த்தித்து மஹா ஸங்கத்தை முடிவிற்குக் கொண்டுவந்தார். வித்வான் ஸ்ரீ. உப. புத்தங்கோட்டஹம் ஸ்ரீநிவாஸசாரிய ஸ்வாமி ஸபையின் சார்பாக அக்ராஸநாதிபதிக்கும் ததியாராதநத்தை செய்வித்த ஸ்ரீ. உப. சே. டி. பார்த்தஸாரதி அய்யங்கார் ஸ்வாமிக்கும், கருங்கல் பாளையம் ம-ா-ா-ஸ்ரீ காமாட்சிப் பிள்ளைக்கும் ஸபைக்கு எழுந்தருளிய

வித்வாங்களுக்கும் ஸப்பியர்களுக்கும் க்ருதஞ்ஞதையை ஆவிஷ்கரிக்க வேண்டுமென்று சொன்னார். ஸ்ரீ. உப. பார்த்தஸாரதி அய்யங்கார் ஸ்வாமி மோஹனூர் வித்வான் ராமாநுஜாச்சாரியார் ஸ்வாமி ஆகியோருடைய ச்ரத்தையைபற்றி அந்த ஸ்வாமி பாராட்டிப் பேசினர். இத்துடன் வித்வாங்களுக்கு தகுந்த ஸம்மாநஞ் செய்யப்பட்டு மஹா ஸங்கம் முடிவடைந்தது.

## தீர்மானங்கள்

மஹா ஸங்கத்தில் பின் வரும் தீர்மானங்கள் செய்யப்பட்டன:—

1. வைதிக மதாநுஸாரிகளுடைய பிரதிநிதித்வம் பெறு ஸம்மத வயது கமிட்டியார் (ருது சாந்தி வயோநிர்ணயக் கமிட்டியார்) ஒரு தலைப்பக்ஷமாக ஹிந்து மத தர்மங்களுக்கு விருத்தமாக ருது சாந்தி விஷயமாகவும் விவாக விஷயத்திலும், செய்திருக்கும் சிபார்சுகளை இந்த மஹா ஸங்கம் பலமாகக் கண்டிக்கிறது.

2. இந்தியா சட்ட சபையில் ஹிந்து கன்னிகைகள் விவாஹ ஸம்பந்தமான சாரதா மசோதா ஆலோசனைக்கு வரும்பொழுது ஸம்மத வயதுக் கமிட்டியின் சிபார்சுகளைக்கொண்டு அதில் முடிவுசெய்யக்கூடாதென்று கவர்ன்மெண்டதிகாரிகளையும் இந்தியா சட்ட சபை யங்கத்தினர்களையும் இந்த மஹா ஸங்கம் கேட்டுக்கொள்ளுகிறது. ஹிந்து மதாசாரத்தையும் ஸமூக ஒழுக்கத்தையும் வெகு தூரம் பாதிக்கக்கூடியதான சாரதா மசோதாவை நிராகரிக்கவேண்டுமென்றும் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறது.

3. தேசத்தின் மதாசாரங்களில் தலையிடுவதில்லையென உறுதி கூறுபவர்களையே இனி ராஜீயப் பொது ஸ்தாபனங்களுக்கு நடைபெறும் தேர்தல்களில் ஆஸ்திக ஹிந்துக்கள் ஆதரிக்கவேண்டுமென்று இந்த மஹாஸங்கம் அபிப்பிராயப்படுகிறது.

4. சாரதா மசோதா சட்டமானல் அதை நிவர்த்திக்கத் தக்க மார்க்கத்தை அவலம்பித்து தர்மத்தை ரக்ஷிக்கவேண்டுமென்று ஆஸ்திகர்கள் எல்லோரையும் பிரார்த்தித்துக் கொள்ளுகிறது.

5. ஸ்ரீ வைஷ்ணவ ஸமூகத்தைப் பின்னப்படுத்தி ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய ஸ்வரூபத்தையே கெடுப்பதாகவிருக்கும் கலாபேதங்களையும் ஸம்ப்ரதாய பேதங்களையும் நிவர்த்திக்க ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் நிர்வாஹ ஸபையார் யதாசக்தி ப்ரயத்நஞ் செய்யவேண்டுமென்று தீர்மானிக்கிறது.

6. சென்னையில் ஸ்ரீ வைஷ்ணவ மாணவர்கள் ஸரியானபடி மதாநுஷ்டாநம் பெறவேண்டி அவர்களுக்கென ஒரு போஜன சாலை ஏற்படுத்த வேண்டுவது அத்யாவச்யமாகிறது. இதில் ஸமூகத்திலுள்ள ப்ரமுகர்கள் கவனஞ்செலுத்தி இந் நோக்கம் கடைத் தேறுமாறு செய்ய வேண்டு மென்று மஹாஸங்கம் கேட்டுக்கொள்ளுகிறது.

இந்த மஹாஸங்கம் இவ்வளவு சிறப்பாக நடைபெற்றதற்கு ஸ்ரீ உ. ப. புத்தங்கோட்டஹம் ஸ்ரீநிவாஸாச்சார்ய ஸ்வாமி ஆரம்ப முதல் எடுத்துக் கொண்ட விசேஷ ச்ரத்தையே முக்கிய காரணமாகும். ஸபை நன்கு நிறைவேறியதனுல் ஏற்படும் கௌர

மும் அந்த ஸ்வாமியையே சேர்ந்ததென்னலாம். ஸ்ரீ அழகிய சிங்கர் இந்த ப்ரவ்ருத்தியை அதிமாத்ரம் திருவுள்ளம் பற்றி ஸ்ரீ முகம் ப்ரஸாதித்ததுடன் ஸ்ரீ ஸந்நிதியிலிருந்து ரூ. 75-ம் நியமித்தருளினர். மற்றும் ஸபையின் ஸுஹ்ருத்துக்களான கோயமுத்தூர் வக்கீல் ஸ்ரீ.உப. பி.என். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், நாமக்கல் வக்கீல்களான ஸ்ரீ. உப. கே. வீரராகவ அய்யங்கார், ஸ்ரீ. உப. கே. வெங்கிடாசார்யர், ராசிபுரம் சப் இன்ஸ்பெக்டர் ஸ்ரீ. உப. பி. எஸ். ராகவாச்சாரியர், வேலூர் சப் ரிஜிஸ்டிரார் ஸ்ரீ உப. கே. வி. ரங்காசார்யர், வித்வான் கிடாம்பி ராமாநுஜாசார்யர், ஆகியோர் சபை நன்கு நடைபெறுமாறு அத்யக்ஷம் ஆதரித்தனர்

---

## ஸ்ரீ வை. ஸி. ஸபையின் நிர்வாஹக் கூட்டம்.

ஸ்ரீ வை. ஸி. ஸபையின் வார்ஷிக நிர்வாகக் கூட்டம் ஆனிமீ 20-ந்தேதி மஹாஸங்கப் பந்தலில் கோயம்புத்தூர் ஸ்ரீ உப. பி. என். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் அக்ராஸநத்தின் கீழ் நடைபெற்றது. பல ஸப்யர்கள் இதில் கலந்து கொண்டனர். ஸபையின் 18-வது வர்ஷ அறிக்கை (முன் ஸஞ்சிகையில் வெளியாகியிருக்கிறது.) ஸபையில் கார்யதர்சியால் படிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. பிறகு அடுத்த வர்ஷத்திற்குப் பின் வருமாறு நிர்வாஹிகள் நிர்த்தேசிக்கப்பட்டனர்.—

### போஷகர்.

ராவ்ஸாஹிப் ஸ்ரீ உ. வே. டி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், டில்லி

### ஸபாத்யக்ஷர்.

ஸ்ரீ உ. வே. வ. வே. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், சென்னை

### ஸபாத்யக்ஷ ப்ரதிநிதிகள்.

ஸ்ரீ. உ. வே. எஸ். ராஜகோபாலாசார்யர், மன்னார்குடி.
,, டி. கோதண்டராம அய்யங்கார், தஞ்சை.
,, எ. வி. கோபாலாசார்யர், திருச்சி.
,, வி. பாஷ்யமய்யங்கார், மதுரை.
,, ஸி. வி. வெங்கடரமணய்யங்கார், கோயமுத்தூர்.
,, ஆர். ராமஸ்வாமி அய்யங்கார், திருவல்லிக்கேணி.
திவான்பஹதூர் வி. ராமபத்ர நாயுடுகாரு, தொட்டப்ப நாய்க்கனூர் ஜமீன்தார்.

### கார்யதர்சிகள்.

ஸ்ரீ. உ. வே. எஸ். கோபாலஸ்வாமி அய்யங்கார், மயிலாப்பூர்.
,, எஸ். லக்ஷ்மீநரஸிம்மாசாரியர், திருவல்லிக்கேணி.

நிர்வாஹக கமிட்டி மெம்பர்கள்.

ஸ்ரீ. உ. வே. ஸ்ரீ. வாஸுதேவாசார்யர், மாம்பலம்
,, கெ. டி. ஸுந்தரராஜாசாரியர், முத்தியாலுபேட்டை
,, எ. ரங்கஸ்வாமி ஸரஸ்வதி, திருவல்லிக்கேணி
,, டி. வி நீலமேகாசார்யர், கீழ்ப்பாக்கம்.
,, டி. ஆர். ராஜகோபாலாசார்யர், புரசைவாக்கம்
,, எஸ். வராஹஸ்வாமி அய்யங்கார், திருவல்லிக்கேணி
,, பி. என். ஸ்ரீ நிவாஸாசாரியர், மயிலாப்பூர்
,, சே.வி. க்ருஷ்ணமாசாரியர், திருவல்லிக்கேணி
,, கே. எஸ். சம்பகேச அய்யங்கார், திருவல்லிக்கேணி
,, டி. இ. சடகோபாசாரியர், திருப்பாப்பிலியூர்
,, என். டி. ஸ்ரீ ராமாச்சாரியர், ,,
,, சக்ரவர்த்தி வி. ஸ்ரீ நிவாஸாசாரியர் கும்பகோணம்
,, கும்மட்டித்திடல் ஜி. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், கும்பகோணம்
,, எ. ராகவாசார்யர், கும்பகோணம்
,, எம். எஸ். கிருஷ்ணமாச்சாரியர், ஸ்ரீரங்கம்
,, எஸ். யாமுனதாதாசார்யர், ,,
,, ஆர். ஸ்ரீநிவாஸாசார்யர், புதுக்கோட்டை
,, எம். எஸ். சேஷய்யங்கார், எம். எல். ஏ. மதுரை
,, என். ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், மதுரை
,, ஆர். ரங்காசார்யர், திருநெல்வேலி
,, ஜெ. வரதராஜ அய்யங்கார், ,,
,, வி. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ,,
,, பி. என். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், கோயம்பத்தூர்
,, வி. ஆர். ஸ்ரீசைல சக்ரவர்த்தி, கோயம்பத்தூர்
,, கிடாம்பி ராமாநுஜாசார்யர், மோஹனூர்
,, கே. வி. வெங்கடாசார்யர், நாமக்கல்
,, கே. வீரராகவ அய்யங்கார், நாமக்கல்
,, வி. என். செல்லமய்யங்கார், சேலம்
,, டி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், ,,
,, கெ. டி. பார்த்தஸாரதி அய்யங்கார், வேலூர்
,, பி. எஸ். ராகவாச்சார்யர், ராசிபுரம்
,, ராவ்ஸாகிப் டி. எஸ். ஸ்ரீநிவாஸராகவாசார்யர், ஹைதராபாத்

பத்ராதிபர்.

ஸ்ரீ. உ. வே. ஸ்ரீ. வாஸுதேவாசார்ய ஸ்வாமியே பத்ராதிபராக இருந்து வர வேண்டுமெனப் பிரார்த்திக்கப்பட்டார்.

## ஸபைக்கு உபகரித்தவர்கள் விவரம்.

மஹா ஸங்கத்திற்கு யெழுந்தருளிய வித்வாங்களுடைய ஸம்மாநத்திற்காக உபகரித்த ஸுஹ்ருத்துக்கள் விவரம்பின் வருமாறு :—

| | | |
|---|---|---|
| | ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீ அழகிய சிங்கர் | 75 0 |
| ஸ்ரீ. உ. வே. | பி. என். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், கோவை | 20 0 |
| ,, | கே வீரராகவ அய்யங்கார், நாமக்கல் | 10 0 |
| ,, | கே. வி. வெங்கடாசாரியர், நாமக்கல் | 5 0 |
| ,, | எம். பரிமள கண்டர், எடையார் | 5 0 |
| ,, | வி. கே. ஈச்வர அய்யர், வேலூர் | 5 0 |
| ,, | ஈயுண்ணி கோபாலய்யங்கார், புதுப்பாளையம் | 5 0 |
| ,, | கருங்கல் பாளையம் கிருஷ்ணராமாநுஜதாஸர் | 5 0 |
| ,, | மேல்முகம் சுப்ரமணிய அய்யர் | 5 0 |
| ,, | எஸ். ராமஸ்வாமி அய்யங்கார், வேலூர் | 2 0 |
| ,, | பி. கே. ரங்கஸ்வாமி அய்யங்கார், புலியூர் | 2 0 |
| ,, | பி. எஸ். ராகவாச்சாரியர், ராசிபுரம் | 2 0 |
| ,, | மற்றொருஸ்வாமி, (திருநாமம் தெரியவில்லை) | 2 0 |
| ,, | வி. என். செல்லமய்யங்கார், சேலம் | 2 0 |
| ,, | கே. வி. ரங்காசார்யர், வேலூர் | 2 0 |
| ,, | என். ஜி. கிருஷ்ணராவ், வேலூர் | 2 0 |
| ,, | அணலை கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் | 2 0 |
| ,, | வித்வான் கிடாம்பி ராமாநுஜாசார்யர், மோஹனூர் | 1 0 |
| ,, | கே. வி. குப்புஸாமி அய்யங்கார், தர்மபுரி | 1 0 |
| ,, | தண்டங்கரை ஸ்ரீநிவாஸாசார்யர் | 1 0 |
| ,, | கே. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், ஸ்ரீரங்கம் | 1 0 |
| ,, | ஸ்ரீநிவாஸராகவாசார்யர், மேலப்பாளையம் | 1 0 |
| ,, | புதுப்பாளையம் அனந்தய்யங்கார் | 1 0 |
| ,, | ஷை ரங்கய்யங்கார் | 1 0 |
| ,, | ரா. அவனுசிசெட்டியார், வேலூர் | 1 0 |
| ,, | ஸந்நிதி கைங்கர்யம் ரங்கஸ்வாமி அய்யங்கார் | 0 8 |
| | | ரூ 159—8 |

| | | |
|---|---|---|
| ஸம்மாநச்செலவு | ரூ | 135 0 |
| ஸ்ரீவை. வி. ஸபைக்குச் சேர்க்கப்பட்டது | ரூ | 24 8 |
| | | 159—8 |

கருங்கல் பாளையம் மகா-ஏ-ஏ-ஸ்ரீ காமாக்ஷிபிள்ளை ததியாராதனத்திற்காக ப்ரத்யேகமாக ரூ. 100—0—0 உபகரித்தார்.

ஸ்ரீ:

। ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம: ।

யோऽந்த: ப்ரவிஸ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஸக்திதர: ஸ்வதாம்நா ।
அந்யாம்ஸ்ச ஹஸ்தசரணஸ்ரவணத்வகாதீந்
ப்ராணாந்நமோ பகவதே புருஷாய துப்யம் ॥

# ஸம்பாதகீயம்.

ஹிந்து மதத்திற்கு விசேஷித்த பெருமையைக் கொடுக்கும் ஆசாரங்களுள் ஆஹார நியமம் என்னும் ஆசாரம் மிகவும் ப்ரதாநம். மற்றை மதஸ்தர்களும், ஆத்ம ச்ரேயஸ்ஸை உத்தேசித்துச் சிற்சில விஷயங்களில் சிற்சில நியமங்களை அநுஷ்டித்து வருகிறார்கள்; ஆனால், ஆஹார நியமம் ஆஹார விஷயத்தில் அவர்கள் பெரிதான நியமமொன்றையும் அநுஷ்டித்து வருவதாகத் தெரியவில்லை. ஆஹார விஷயமாக அவர்கள் சொல்லுவதாவது: 'நாம் புஜிக்கும் ஆஹாரமெல்லாம் கேவலம் தேஹ தாரணத்திற்கும் அதன் புஷ்டிக்கும் காரணமாகின்றதே தவிர, மநஸ்ஸில் தோன்றும் நல்ல எண்ணங்களுக்கும் கெட்ட எண்ணங்களுக்கும் அது காரணமாவதில்லை. எந்த அந்நம் தேஹத்திற்கு அநுகூலமாக இருக்கின்றதோ அதற்கு ஒரு வித தோஷமுமிருக்கமாட்டாது. அதற்கு வேறு விதமான பரிசுத்தி ஒன்றையும் நாம் தேடவேண்டுவதுமில்லை' என்பதே. நமது பெரியோர்களோ வென்றால், 'நமது அந்நத்திற்கு இம்மாதிரியான பாஹ்ய பரிசுத்தி மாத்ரம் போதாது; நாம் புஜிக்கும் அந்நம் நமது தேஹத்தின் ஆரோக்யம் அநாரோக்யம் இவைகளுக்குக் காரணமாவது போல, நமது மநஸ்ஸின் ஸாத்விக அஸாத்விகத் தன்மைக்கும் காரணமாகின்றது; ஸத்வ வ்ருத்தியைச் செய்யத் தகுந்தவை, சில பதார்த்தங்கள்; மற்றும் சில, ராஜஸ்தமோ குணங்களை வ்ருத்தி செய்பவை; ஆத்ம ச்ரேயஸ்ஸை இச்சிப்பவரெல்லாரும் ஸத்வ வ்ருத்தியைச் செய்யக்கூடிய பதார்த்தங்களையே உட்கொள்ள வேண்டும், மற்றவைகளை விலக்க வேண்டும்' என்று

ஒரு ப்ரபலமான நியமத்தை விதித்திருக்கிறார்கள். "அன்னமயம் ஹி ஸோம்ய மந:" [மநஸ் என்னும் நமது அந்தரிந்த்ரியம் நம்மால் புஜிக்கப்படும் அந்நத்தைப் பொருத்து நிற்கின்றது]; "ஆஹாரசுத்தௌ ஸத்த்வசுத்தி: ஸத்த்வசுத்தௌ த்ருவா ஸ்ம்ருதி:" [ஆஹாரம் சுத்தமாக இருந்தால் ஸத்வ குணம் சுத்தமாகின்றது; ஸத்வம் சுத்தமானால் மநஸ்ஸுக்கு உறுதியுண்டு] என்பது நமது சாஸ்த்ர வாக்யம். ஸ்ரீபகவத் கீதையிலும்,

"யஜ்ஞசிஷ்டாசிந: ஸந்தோ முச்யந்தே ஸர்வகில்பிஷை: ।
புஞ்ஜதே தே த்வகம் பாபா யே பசந்த்யாத்மகாரணாத்"

என்று ஸ்ரீ பகவானே, தேவதாராதநரூபமாகிற யஜ்ஞத்தால் அந்நத்திற்கு ஒருவித பரிசுத்தி ஏற்படுகின்றதென்றும், அப்படி நிவேதித அந்நத்தால் சரீர யாத்ரையைச் செய்து வருபவர்கள் பாபங்களிலிருந்து விடப்படுகிறார்களென்றும், அம்மாதிரி தேவதாராதநத்தால் ஏற்படும் சுத்தியை அநாதரித்து எவர்கள் தம்முடைய ப்ரயோஜநத்திற்கென்றே பாகாதிகளைச் செய்து அவைகளைத் தமது தேஹ புஷ்டிக்காகவே புஜித்து வருகிறார்களோ அவர்கள் பாபஹேதுவான அந்நத்தைப் புஜிக்கிறார்களென்றும், அவர்களுடைய மநஸ்ஸில் எவ்வித தெளிவும் ஏற்படமாட்டாதென்றும் உபதேசித்திருக்கிறான். "கேவலாகோ பவதி கேவலாதீ" என்னும் ச்ருதி வாக்யமும் இந்த அர்த்தத்தையே வற்புறுத்துகின்றது.

சாஸ்த்ர விதிகள் இவ்விதமிருக்க, நமது அநுஷ்டாநம் மாத்ரம் இப்பொழுது பெருத்த வைபரீத்யத்தை அடைந்திருக்கின்றது. லோகத்தில் மிக்க அபூர்வமாகத் தென்படும் சிற் சில பெரியோர்களைத் தவிர மற்ற ஜனங்களெல்லாரும் இது விஷயமாகச் சாஸ்த்ரம் விதிக்கும் நியமங்களை அநாதரித்து விட்டார்களென்றே சொல்லவேண்டும். இதற்குக் காரணம், சிலர் விஷயத்தில், சாஸ்த்ரங்களின் அநபிஜ்ஞதையாக இருக்கலாம்; மற்றும் சிலர் விஷயத்தில், சாஸ்த்ர ப்ரகாரம் அநுஷ்டிப்பதில் அசக்தி ஏற்பட்டிருக்கலாம்; வேறு சிலர் விஷயத்தில், அது, உதாஸீந புத்தியாலும் ஸம்பவிக்கக்கூடும்; இன்னும் சிலர் விஷயத்தில், சாஸ்த்ரத்தில் அவர்களுக்குள்ள த்வேஷ புத்தியாலும் நேரக் கூடும். எது காரணமாக இருந்தாலும் விதி நிஷேதங்களெல்லாம் கை நழுவவிடப்பட்டுப் போய்விட்டன என்பதில் ஆக்ஷேபமில்லை. பகவந் நிவேதநமென்பதும் வைச்வ தேவமென்பதும் ப்ராயேண லோபத்தை அடைந்து விட்டன. வர்ஜ்யாவர்ஜ்ய விவேகமே பெரும்பாலும் சூந்யமாகி விட்டது. அத்யந்தம் நிஷித்தமும் த்ருஷ்டத்திலேயே தீமையை விளை

விக்கக்கூடியவைகளுமான அநேக பதார்த்தங்கள் நிஸ்ஸங்கோசமாகவும் பலயான உத்ஸாஹத்துடனும் புஜிக்கப்பட்டு வருகின்றன. நாம் எல்லாரும் இந்த விஷயத்தில் கேவலம் பசு ப்ராயர்களாக ஆகிவிட்டோமே யன்றி, விவேகத்தை உடைய மநுஷ்ய ஜந்மம் பெற்றிருப்பவர்களாய் நடந்து கொள்ளவே இல்லை. இது கலியின் கொடுமையன்றோ?

'ஆஹார நியமம் என்பது கேவலம் பாஹ்ய விஷய ஸம்பந்தமானது தானே ! அது லோபம் அடைவதைப் பற்றி நாம் ஏன் இவ்வளவு சோகிக்க வேண்டும்?' என்று சிலர் சங்கிக்கலாம். ஜகத்தின் ஸுஸ்திதி என்பது ஜநங்களின் ஸாத்விக ஸ்வபாவத்தைச் சார்ந்து நிற்கின்றது என்பதை எல்லாரும் ஒத்துக்கொள்ளவேண்டும். அந்த ஸாத்விக ஸ்வபாவம், ஜந்மாந்தர வாஸநையையும் பெரியோர்களுடைய சிக்ஷணத்தால் ஏற்படும் ஸம்ஸ்காரத்தையும் ஸஹவாஸத்தையும் சார்ந்திருக்கின்றது போல, உட்கொள்ளப்படும் அந்ந பாநாதிகளையும் சார்ந்திருக்கின்றது என்பது நமது நம்பிக்கை. அப்படி ஸாத்விக ஸ்வபாவத்திற்கு ஒரு காரணமாயிருக்கும் இந்த ஆஹார நியமம் நசிக்கிறது என்றால், ஜகத்தின் க்ஷேமத்தை இச்சிக்குமவர்களுடைய மநஸ் கலங்காமலும் நிற்குமோ? இது மாத்ர மன்று. நாம், ஆப்த வாக்யமாகிற சாஸ்த்ரங்களிலும் அவைகளாற் சொல்லப்படும் அத்ருஷ்ட பலங்களிலும் நம்பிக்கை உள்ளவர்கள். சுத்தமான அந்நத்தைப் புஜிப்பதால் சில பாபங்கள் விலகுகின்றன என்று சாஸ்த்ரம் சொல்லும் பக்ஷத்தில், அந்தச் சுத்தியை அநாதரிப்பவர்கள் அந்தப் பலத்தை இழந்து விடுவார்களே என்பதும் நமது சோகத்திற்குக் காரணமாகின்றது. பல காரண விசேஷங்களால் நமக்கு அஸாதாரணங்களாயிருக்கும் ஆசாரங்களெல்லாம் இக்காலத்தில் கொஞ்சம் கொஞ்சமாக நாசத்தை அடைந்து வருகின்றன; அது காரணமாக நாமும் அநேக ப்ரகாரங்களில் க்ஷயித்தும் வருகிறோம். மநஸ்விகளாகவும் சக்தர்களாகவும் இருக்கும் பெரியோர்கள் இந்தத் துர்த்தசையை இனியும் உபேக்ஷித் திருக்கலாமோ?

ஶிவாஶூந்யம் ஶீக்ரம் ஸரணிமதிபி꞉ க்ருத்ஸ்நலோகா꞉ ப்ரஸாத்யா
குர்யாத்ம் நிஸ்ஸங்க விதிவிரஹிதம் ஸாந்த்ரோத்காதநம் ச ।
யதாகாமம் ஹந்தா விஹரணவிதி꞉ ப்ராயஶோ லுப்தபம்போ
தவீநாதாசாரோऽயம் ஶ்வஶ்வநவஜ்ரம்ஹதே ஹா ஹதா꞉ ஸ்ம꞉ ॥

* * * * *

சென்ற வர்ஷங்களிற் போல இவ் வர்ஷத்திலும் வார்ஷிக ஸ்ரீ வைஷ்ணவ மஹாஸங்கம் நன்ருக நடந்தேறிற்று என்று கேள்விப்பட்டு நாம் ஆநந்திக்கிறோம். மஹா மஹோபாத்யாயர் லக்ஷ்மீபுரம் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி முதலான அநேக வித்வாங்கள் அந்த ஸங்கத்தை அலங்கரித்தார்களாம். உபந்யாஸங்களும் வித்வத் ஸதஸ்ஸும் மிக்க சோபையுடன் நடைபெற்றனவாம். அநேக ஆஸ்திக லௌகிகர்கள் அக்காலத்தில் அவ்விடத்தில் ஸந்நிஹிதர்களாக இருந்தார்களென்றும் நாம் அறிகிறோம்.

பத்தோன்பதாவது ஸ்ரீவைஷ்ணவ மஹாஸங்கம்.

இவையெல்லாம் ஸதஸ்ஸின் பெருமைக்குப் பர்யாப்தங்களான நிதர்சநங்களே. 'பத்தொன்பது வர்ஷ காலமாக இம்மாதிரி ப்ரதி வர்ஷமும் ஸதஸ் நடந்து வருகின்றதே! இதனால் என்ன ப்ரயோஜநம் ஏற்பட்டிருக்கின்றது?' என்று சிலர் சோத்யம் செய்கிறார்கள். அவர்களுக்கு நாம் சொல்லும் ஸமாதாநமாவது: 'ஸதஸ் நடைபெறுவதின் பலமாக வேறு ப்ரயோஜநங்கள் ஏற்பட்டாலும் ஏற்படா விட்டாலும், இம்மாதிரி பாகவத ஸமூஹம் ஒன்று சேர்ந்து சிலர் உபந்யாஸாதிகளைச் செய்வதும் மற்றும் சிலர் அவைகளைக் கேட்பதும், இவை முதலியவைகளே நமக்கு பரம ப்ரயோஜநம்' என்பதுதான். ஸ்வயம் ப்ரயோஜநமாகச் செய்யப்படும் கார்யங்களுக்குப் பலாந்தரங்களைத் தேடுவதுமுண்டோ? பகவானுடைய திவ்ய சேஷ்டிதங்கள் அவனுடைய கல்யாணகுணங்கள் இவைகளைப்பற்றி பாவ ஸமந்விதர்களான புதர்கள் அநந்ய ப்ரயோஜநமாக உபந்யஸித்து ஸந்தோஷிப்பதையும், ச்ரத்தாளுக்களான ஆஸ்திகர்கள் அந்த உபந்யாஸங்களைக் கேட்டு அநவதிக அதிசய ப்ரியத்துடன் ரமிப்பதையும் காட்டிலும் வேறு சில்வான ப்ரயோஜநங்களும் ப்ரயோஜநங்களாகுமோ? இம்மாதிரி ஸதஸ்ஸுகள் அடிக்கடி நடைபெற்ருல் இந்த ஸம்ஸாரத்திலேயே நமக்கு அபவர்க்கம் ப்ராப்தமாகி விட்டதென்றன்றோ சொல்லவேண்டும்?

இவ்வர்ஷத்திய ஸதஸ்ஸை நடத்திவைத்ததன் பெருமை முழுவதும், புத்தங்கோட்டகம் வித்வாந் ஸ்ரீ·உப. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியைச் சார்ந்ததென்று நாம் அறிகிறோம். இது அதிமாத்ரம் அநுரூபமே. வைதிக ஸதஸ் வைதிகர்களாலேயே நடத்தப்படவேண்டும். பகவத் ப்ரியர்கள் இச்சித்தால், இதர நிரபேக்ஷமாகக் கார்யங்களை ஸாதித்துக்கொள்வதும் அசக்ய

மாகுமோ? அந்த ஸ்வாமியின் இஷ்டத்திற்கு இணங்கி, வேலூர் ஸ்தல வாஸிகளான ஸ்ரீ. உப. கே. டி. பார்த்தஸாரதி ஐயங்கார் முதலான ஆஸ்தி கோத்தமர்கள் மிகுந்த உத்ஸாஹத்துடன் "யஸ்ய யஸ்ய யதாகாலம்" என்கிறபடி உத்தமமான ஆதித்யத்தால் ஸப்யர்களை த்ருப்தி செய்து வைத்தார்களென்பதும் அத்யதிகமான ஸந்தோஷத்தை ஜநிப்பிக்கின்றது.

சென்ற வர்ஷங்களிற் போல இவ்வர்ஷத்திலும் ஸ்ரீ அழகிய சிங்கருடைய பரம க்ருபைக்கு இந்த ஸதஸ் பாத்ரமாயிற்றும். அப்படிப்பட்ட க்ருபையும் ஹார்த்தமான அநுக்ரஹமுமே நமக்கு முக்யமான அவலம்பம். அவைகளே இந்த ஸதஸ்ஸை உத்தரோத்தரம் உபசீயமான வைபவத்துடன் ஓங்கித் தழைக்கும்படிச் செய்யுமென்று நாம் பூர்ண ப்ரத்யாசையுடன் எதிர்பார்த்திருக்கிறோம்.

* * * * *

உத்தரதேசத்திலிருக்கும் தர்ப்பங்கா ராஜ்யத்தின் அதிபதியான ஸ்ரீ மஹாராஜாதிராஜ ஸ்ரீமாந் ராமேச்வர ஸிங் என்பவர் தேஹ வியோகமடைந்து விட்டார் என்பதைக் கேட்டு நாம் சோகிக்கிறோம். அவர் ஒரு மஹா ப்ரபு; நமது ஸநாதந தர்மத்தில் மிக்க விச்வாஸமுள்ளவர்; ஸ்வயம் அந்தத் தர்மத்தை ஆர்ஜவத்துடன் அநுஷ்டித்தவர்; அந்தத் தர்மத்தில் விச்வாஸமுடைய வைதிகரெல்லாருக்கும் ஏராளமாக ஸஹாயம் செய்தவர். அவருக்கு, நமது ஸம்ஸ்க்ருத பாஷையின் மீது இருந்த அபிமாநமும் அதன் அபிவ்ருத்திக்காக அவர் செய்து வந்திருக்கும் ப்ரயத்நங்களும் அளவற்றவை. ஜந்மாந்தர ஸுக்ருத விசேஷத்தால் அவரிடம் ஹார்த்தமான விஷ்ணு பக்தியும் குடிகொண்டிருந்தது. இப்படிப்பட்ட மஹாந் காலம் சென்றுவிட்டார் என்பது தான் நமக்கு துக்கத்தை ஜநிப்பிக்கின்றது. இக்காலத்தில் ஜநங்கள், பெரும்பாலும், ப்ரபுக்களாயிருக்கும் பிறர்களுடைய அநுஷ்டாநத்தைப் பார்த்தே தமது அநுஷ்டாநத்தைச் சீர்திருத்தம் செய்துகொள்ளுகிறார்கள் என்பது ப்ரஸித்தம். அப்படி நல்வழியில் சீர்திருத்தம் ஏற்படுவதற்கு முக்ய காரணமாயிருக்கும் இவரைப் போன்ற மஹாந்கள் லுப்தர்களாகி விட்டால், லோகத்தில் தர்மம் எவ்விதம் நிலை பெறும்? பகவத் ஸங்கல்பமே ப்ரமாணம்.

**ननु च** सर्वस्य जन्तोः परमात्मा अन्तर्यामी, तन्नियाम्यं च सर्वमेवेत्युक्तम् । एवं च सति विधिनिषेधशास्त्राणामधिकारी न दृश्यते । यः स्वबुद्ध्यैव प्रवृत्तिनिवृत्तिशक्तः, स एव 'एवं कुर्यान्न कुर्यात्' इति विधिनिषेधयोग्यः । न चैष दृश्यते । सर्वेष्वपि प्रवृत्तिजातेषु सर्वस्य प्रेरकः परमात्मा कारयितेति

---

"**ननु च**........." இவ்விடத்தில் மற்றுமொரு ஆக்ஷேபம் வரக்கூடும். 'ஸகல ஜந்துக்களுக்கும் பரமாத்மா அந்தர்யாமியாக இருக்கிருனென்றும், அவனுலேயே ஸகலமும் நியமிக்கப்பட்டு வருகின்றதென்றும் சொல்லப்பட்டிருக்கிறதன்ருே? இது வஸ்து ஸ்திதியாக இருக்கும் பக்ஷத்தில், 'இதைச் செய் இதைச் செய்யவேண்டாம்' என்று சொல்லும் சாஸ்த்ரங்களுக்கு அதிகாரியே இராமற் போய்விட ப்ரஸங்கிக்கும். எவன் தன் புத்தியைக் கொண்டே ஒரு கார்யத்தில் ப்ரவ்ருத்திக்கவோ ஒன்றிலிருந்து நிவ்ருத்திக் கவோ சக்தனுக இருக்கிருனே, அவன் ஒருவனே 'இதைச் செய் இதைச் செய்யவேண் டாம்' என்னும் விதி நிஷேதங்களுக்கு யோக்யனுவான். அம்மாதிரி ஸ்வாதந்த்ரயத் துடன் கூடினவனுக ஒருவன் கூட இல்லையே! தவிரவும், எல்லாருக்கும் ப்ரேரகனுக இருக்கும் பரமாத்மாவே ஸர்வ ப்ரவ்ருத்திகளிலும் கார்யங்களைச் செய்விக்கிறவ ஞகிருன்

---

**ननु च**—இவ்விதம், 'தாம் சொன்ன அர்த்தம் பூர்வாசார்யர்களால் சொல் லப்பட்டதே' என்பதை நிரூபித்து விட்டு, இப்பொழுது மற்றுமொரு சங்கையைச் செய்துகொண்டு அதற்கு ஸமாதானத்தைச் சொல்லுகிருர். 'பரமாத்மா ஸர்வ நியந்தா வென்பதும், ஜீவ வர்க்கம் முழுவதும் அவனுல் நியமிக்கப்பட்டுக் கார்யங்களில் ப்ரவ்ருத் திக்கின்ற தென்பதும் உண்மையானுல், சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டுள்ள விதி நிஷேதங்களெல்லாம் அர்த்த மற்றவையாக வன்ருே ப்ரஸங்கிக்கும்?' என்பது சங்கை. இது மாத்ரமன்று. 'ஸர்வ நியந்தாவாகிற பரமாத்மா, ஒருவனை ஸத் கார்யத்திலும் மற் ருெருவனை அஸத் கார்யத்திலும் ப்ரவ்ருத்திப்பிக்கிருன் என்று சொல்லும் பக்ஷத்தில் அந்தப் பரமாத்மாவுக்கு வைஷம்யம் (பக்ஷபாதம்) நைர்க்ருண்யம் (தயையற்றிருக்கும் தன்மை) முதலிய கெட்ட குணங்கள் ப்ரஸங்கிக்குமே' என்பதும் இவ்விடத்தில் சங்கிக் கப் படுகின்றது.

**सर्वेष्वपि प्रवृत्तिजातेषु सर्वस्य प्रेरकः परमात्मा कारयिता च**—'லோகத்தில் அரசன் நியமிக்கிறவனுகவும் ப்ரஜைகள் நியமிக்கப் படுகிற வர்களாகவும் இருக்கையிலும், 'இதைச் செய்' 'இதைச் செய்யாதே' என்று ராஜாஜ்ஞை ஸார்த்தகமாக வில்லையா? அம்மாதிரி ஏன் சாஸ்த்ர விதி நிஷேதங்கள் ஸார்த்தகங்களாகக் கூடா?' என்று ஸந்தேஹம் ஜநிக்கலாம். அரசனுக்கும் ப்ரஜைகளுக்கு முள்ள நியாமக

**𑌤𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌨𑌿𑌯𑌮𑌨𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌿𑌤𑌮𑍍। 𑌤𑌥𑌾 𑌚 𑌶𑍍𑌰𑍂𑌯𑌤𑍇—“𑌏𑌷 𑌹𑍍𑌯𑍇𑌵 𑌸𑌾𑌧𑍁 𑌕𑌰𑍍𑌮 𑌕𑌾𑌰𑌯𑌤𑌿 𑌤𑌂, 𑌯𑌮𑍇𑌭𑍍𑌯𑍋 𑌲𑍋𑌕𑍇𑌭𑍍𑌯 𑌉𑌨𑍍𑌨𑌿𑌨𑍀𑌷𑌤𑌿; 𑌏𑌷 𑌏𑌵𑌾𑌸𑌾𑌧𑍁 𑌕𑌰𑍍𑌮 𑌕𑌾𑌰𑌯𑌤𑌿 𑌤𑌂, 𑌯𑌮𑌧𑍋 𑌨𑌿𑌨𑍀𑌷𑌤𑌿” [𑌕𑍌𑌷𑍀. 3-9] 𑌇𑌤𑌿। 𑌸𑌾𑌧𑍍𑌵𑌸𑌾𑌧𑍁𑌕𑌰𑍍𑌮𑌕𑌾𑌰𑌯𑌿𑌤𑍃𑌤𑍍𑌵𑍇𑌨 𑌵𑍈𑌷𑌮𑍍𑌯𑌂 𑌚 𑌪𑍍𑌰𑌸𑌜𑍍𑌯𑌤𑍇 ।**

---

என்று பரமாத்மாவுக்கு எல்லாரையும் நியமிக்கும் சக்தி ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கின்றது. “𑌏𑌷 𑌹𑍍𑌯𑍇𑌵” இத்யாதியான ச்ருதியும் அம்மாதிரி சொல்லுகின்றது. இப்படிச் சிலரை நல்ல கார்யங்களைச் செய்விக்கிறபடியாலும் மற்றும் சிலரைக் கெட்ட கார்யங்களைச் செய்விக்கிறபடியாலும், பரமாத்மா தயையற்றவன் பக்ஷபாதி என்று சொல்லும்படி நேர்கின்றதன்றோ?

---

நியாம்ய பாவம் போன்றதன்று பரமாத்மாவுக்கும் ஜீவர்களுக்கு முள்ள பாவம். ப்ரஜைகள் ஸ்வாதீநமாகவே ப்ரவ்ருத்தியைச் செய்கிறார்கள்; அபராதத்தைச் செய்தால், அதன் பலமாகிற துக்கத்தை அநுபவிப்பதில் மாத்ரம் ராஜ நியாம்யத்வம் அவர்களுக்கு ஏற்படுகின்றது. ஜீவர்கள் விஷயத்திலோ வென்றால் ஸாதநத்தை அநுஷ்டிக்கும் காலத்திலும் அவர்கள் பரமாத்மாவுக்குப் பராதீநர்களாக இருக்கிறார்கள். இப்படி அத்யந்தம் அஸ்வாதீநமாக இருப்பவர்களுக்கு விதி நிஷேத போக்யதை எப்படி ஏற்படும்? இது ‘𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌜𑌾𑌤𑍇’ இத்யாதியால் சொல்லப்படும் கருத்து.

𑌏𑌷 𑌹𑍍𑌯𑍇𑌵.........”। **𑌯𑌂**—எந்த ஜீவனை, **𑌏𑌭𑍍𑌯𑍋 𑌲𑍋𑌕𑍇𑌭𑍍𑌯𑌃**—இந்த லோகங்களிலிருந்து, **𑌉𑌨𑍍𑌨𑌿𑌨𑍀𑌷𑌤𑌿**—உயரத் தூக்குவதற்கு இச்சிக்கிறானோ, **𑌤𑌂**—அவனை, **𑌏𑌷 𑌏𑌵**—இந்தப் பரமாத்மாவே, **𑌸𑌾𑌧𑍁 𑌕𑌰𑍍𑌮**—நல்ல கர்மங்களை, **𑌕𑌾𑌰𑌯𑌤𑌿**—செய்விக்கிறான். **𑌯𑌮𑌧𑍋 𑌨𑌿𑌨𑍀𑌷𑌤𑌿**—எவனைக் கீழே தள்ளுவதற்கு இச்சிக்கிறானோ, **𑌤𑌂**—அவனை, **𑌏𑌷 𑌏𑌵**—இந்தப் பரமாத்மாவே, **𑌅𑌸𑌾𑌧𑍁 𑌕𑌰𑍍𑌮 𑌕𑌾𑌰𑌯𑌤𑌿**—கெட்ட கார்யங்களைச் செய்விக்கிறான். இந்த ச்ருதி வாக்யங்கள் பரமாத்மாவுக்கு வைஷம்ய நைர்க்ருண்யங்களைச் சொல்வனபோலவே காணப்படுகின்றன.

**𑌅𑌤𑍍𑌰𑍋𑌚𑍍𑌯𑌤𑍇**—இந்தச் சங்கைக்கு ஸமாதாநம் சொல்லுகிறார். ஜீவர்கள் தமது சைதந்ய சக்தியையும் ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளுக்கு அபேக்ஷிதமாயுள்ள கரண களேபரம் முதலியவற்றையும் பரமாத்மாவினிட மிருந்தே பெறுகிறபடியால், அவர்கள் எப்பொழுதும் பரமாத்மாதீநமான ப்ரவ்ருத்தியை உடைத்தாயிருக்கிறார்கள் என்பது உண்மையே. ஆனால், அந்தச் சைதந்யம் முதலியவற்றைக்கொண்டு அந்த ஜீவர்கள் ஒரு ப்ரவ்ருத்தியை ஆரம்பிக்கும் பொழுது அவர்கள் ஸ்வதந்த்ரர்களாகவே

अत्रोच्यते। सर्वेषामेव चेतनानां चिच्छक्तियोगः प्रवृत्तिशक्तियोग इत्यादि सर्वं प्रवृत्तिनिवृत्तिपरिकरं समानम्

---

அத்ரோச்யதே............இந்தச் சங்கைக்கு ஸமாதாநம் சொல்லப்படுகிறது பரமாத்மாவாகிற பகவாந், ஸகல ஜீவர்களுக்கும், சைதந்யம் என்னும் சக்தியையும் கார்யங்களில் ப்ரவ்ருத்திக்கும் சக்தியையும் அம்மாதிரி ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளுக்கு

---

ஆரம்பிக்கிறார்கள். அந்த ப்ரவ்ருத்தியின் ஆரம்பத்திற்குப் பரமாத்மாவின் அபேக்ஷையே இல்லை; அப்பொழுது அவன் கேவலம் உபேக்ஷகனாகவே இருக்கிறான். அப்படிப் பரமாத்மாவின் அபேக்ஷை இல்லாமல் ஜீவர்கள் ப்ரவ்ருத்திக்கச் சக்தர்களாக இருக்கையிலும், அவர்கள் எப்பொழுதும் நியமிக்கப்படும் அர்ஹதை உள்ளவரானபடியாலும், பரமாத்மா எப்பொழுதும் நியமிக்க அர்ஹனாயிருக்கிறபடியாலும், 'பரமாத்மா எப்பொழுதும் நியமித்துக்கொண்டிருக்கிறான்' என்று நாம் வ்யவஹரிக்கிறோம். தவிரவும், ஒவ்வொரு ப்ரவ்ருத்தியிலும் ஸுக துக்க ரூபங்களான பலங்களைக் கொடுப்பவன் பரமாத்மாவே; எந்தத் தேஹாதிகளைக்கொண்டு நாம் ப்ரவ்ருத்திக்கிறோமோ அவைகளும் அவனால் கொடுக்கப்பட்டவைகளே; அவனாலேயே அவை தரிக்கப்பட்டும் வருகின்றன; அவன் சேஷி, நாம் சேஷ பூதர்கள். அப்படிப் பரமாத்மா உபேக்ஷித்திருக்கிறான் என்பதும் பரமாத்மாவின் ஸ்வாதந்த்ர்யாதிக்யத்தையன்றோ குறிக்கின்றது? ப்ரதம ப்ரவ்ருத்தியில் இம்மாதிரி உபேக்ஷகனாக இருந்து விட்டுப் பிறகு பரமாத்மா, அந்த ப்ரவ்ருத்திக்கு அநுமதி கொடுக்கிறான் என்றும் நாம் சொல்லுகிறோம். ஆனால், 'அநுமதி கொடுக்கிறான்' என்பதற்கு 'ப்ரவ்ருத்திக்காமல் இருக்கும் ஒருவனை ப்ரவ்ருத்திக்கும்படி செய்கிறான்' என்பது அர்த்தமன்று; ஆரம்பிக்கப்பட்ட ப்ரவ்ருத்தி பலவத்தாகப் பரிணமிக்க மாத்ரம் அந்த அநுமதி ஹேதுவாகின்றது. இப்படி ஜீவர்கள், தமது ஜ்ஞாநம், ஒரு கார்யத்தைச் செய்ய வேண்டும் என்னும் இச்சை, அதற்காகச் செய்யப்படும் ப்ரயத்நம் இந்த அம்சங்களெல்லாவற்றிலும் ஸ்வதந்த்ரர்களாகவே இருக்கிறபடியால், அவர்கள், 'இதைச் செய்' 'இதைச் செய்யக் கூடாது' என்பவை முதலிய விதி நிஷேதங்களுக்கு யோக்யர்களாகிறார்கள் என்பதில் ஆக்ஷேபமில்லை.

'அகார்யத்தைச் செய்யப்போகும் ஒரு ஜீவனைப் பரமாத்மா உபேக்ஷகனாகப் பார்த்துக்கொண்டு அதற்கு அவன் அநுமதியையும் கொடுக்கிறான் என்றால் அது பரமாத்மாவுக்குத் தோஷமாகமாட்டாதோ?' என்று ஒரு சங்கை உதிக்கலாம். இந்தச் சங்கைக்கும் அவகாசமில்லை. பரமாத்மா அப்படி அத்யந்தம் உபேக்ஷித்து நிற்கவில்லை; சாஸ்த்ர ப்ரவர்த்தநம் முதலியவைகளால், அவன், முதலிலேயே நம்மை அஹிதங்களான கார்யங்களிலிருந்து தடுத்திருக்கிறானன்றோ? அந்தத் தடையைக் கடந்து அஹிதங்களில் நாம் ப்ரவ்ருத்திக்க ஆரம்பித்தால், அப்பொழுது அவன் உபேக்ஷித்திருக்கிறான் என்பது எப்படி தோஷமாகும்?

**ந ஸம்ஶயாய, தத்விவக்ஷணாய ததாயாஸோ ஹ்யபேக்ஷா, அந்த:ப்ரவிஶ்யாந்தர்யாமிதயா ச நியமநம் குர்வந் ஶேஷித்வேநாவஸ்தித: பரமாத்மா । ஜீவஸ்து ஸ ததாஹிதஶக்தி: ஸந் ப்ரவ்ருத்திநிவ்ருத்த்யாதி ஸ்வயமேவ குருதே । ஏவம் குர்வாணமீக்ஷமாண: பரமாத்மோதாஸீந ஆஸ்தே । அத: ஸர்வமுபபந்நம்। ஸாத்வஸாதுகர்மகாரயித்ருத்வஞ்ச வ்யவஸ்திதவிஷயம், ந ஸர்வஸாதா**

---

வேண்டுமவையான கரண களேபரங்களையும், அந்தந்த ஜீவர்களுக்கு ஸ்வதந்த்ரங்களாக இருக்கும்படி பொதுவாக முதலில் கொடுக்கிறான். அப்படிக் கொடுக்கப்பட்டவைகளின் நிர்வஹணத்திற்காக, அவைகளுக்குத் தானே ஆதாரமாகவும் இருக்கிறான். அந்தக் கரண களேபரங்களைக் கொண்டு அந்த ஜீவர்களாற் செய்யப்படும் வ்யாபாரங்கள் சிதிலமாகாமல் பலத்துடன் கூடினவைகளாக ஆகும்பொருட்டு, அந்தந்த ஜீவர்களுக்குள் தானே அநுப்ரவேசித்து, அந்த வ்யாபாரங்களுக்குத் தனது அநுமதியைக் கொடுத்து அவர்களை நியமித்தும் வருகிறான். இப்படியெல்லாம் இருக்கையில், அவனுக்கும் ஜீவர்களுக்குமுள்ள ஆத்ம சரீரபாவமும் தொடர்ந்தே வருகிறபடியால், அவனுடைய சேஷித்வமும் குறையாமலே நிற்கின்றது. ஜீவன், இவ்விதம் பகவானால் கொடுக்கப்பட்ட சக்தியை உடையவனாய், ஒரு கார்யத்தைச் செய்வது மற்றொன்றை விடுவது முதலான வ்யாபாரங்களை ஸ்வயமே ஸ்வதந்த்ரமாகச் செய்கிறான். அப்பொழுது பரமாத்மா கேவலம் உபேக்ஷகனாகவே இருக்கிறபடியால், ஜீவர்களுக்குச் சொல்லப்பட்டுள்ள விதி நிஷேத யோக்யத்வமெல்லாம் உபபந்நமே. நல்ல கர்மங்களையும் கெட்ட கர்.

---

**தத்தஶக்தியோக:**—'சைதந்யம்' என்னும் சக்தியையும் பகவானே நமக்குக் கொடுக்கிறான். ஆனால் அது அவனுடைய நித்யேச்சையால் கொடுபட்டிருக்கிறபடியால் அது நமக்கு நித்யமாக இருக்கின்றது. ஆகையால்தான் ஜீவர்களை நித்யர்களென்று நாம் சொல்லுகிறோம்.

**ஸாத்வஸாதுகர்மகாரயித்ருத்வஞ்ச**—பரமாத்மா, சிலரை நல்ல கார்யங்களைச் செய்விக்கிறானென்றும், மற்றும் சிலரைக் கெட்ட கார்யங்களைச் செய்விக்கிறானென்றும் ச்ருதி ஸ்ம்ருதிகள் சொல்வது உண்மையே. ஸகல ஜீவர்களையும் அவன் அம்மாதிரி ப்ரவ்ருத்திப்பிக்கும் பக்ஷத்தில், அவனுக்குப் பக்ஷபாதம் நிர்த்தயத்வம் முதலிய தோஷங்கள் ப்ரஸங்கிக்கும். அப்படி எல்லாருடைய விஷயத்திலும் அவன் ப்ரவ்ருத்திக்கவில்லை. எவன் அதிமாத்ரம் பரம புருஷாநுகூல்யத்தில் உறுதியுடன் ஏற்கெனவே ஸ்வயமாக ப்ரவ்ருத்தித்திருக்கிறானோ, அவனை ப்ரீதியுடன் பரமாத்மா அநுக்ரஹித்து, தன்னை அடையும் உபாயங்களில் அவனை ப்ரவ்ருத்திப்பிக்கிறான்; ப்ராதிகூல்யத்தில் அதிமாத்ரம் ப்ரவ்ருத்தித்திருப்பவனை நிக்ரஹித்து மேன்மேல் துஷ்கர்மங்களிலேயே அவனை ப்ரவ்ருத்திப்பிக்கிறான். இந்தச் சிஷ்டாநுக்ரஹ துஷ்டநிக்ரஹ ரூபமான பரிபாலனம் எப்படி தோஷமாகும்?

𑌰𑌣𑍀𑌯। 𑌯𑌸𑍍𑌤𑍁 𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌸𑍍𑌵𑌯𑌮𑍇𑌵𑌾𑌤𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌨𑍁𑌕𑍂𑌲𑍍𑌯𑍇 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌃, 𑌤𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿 𑌪𑍍𑌰𑍀𑌤𑌃 𑌸𑍍𑌵𑌯𑌮𑍇𑌵 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌯𑍋𑌗𑌦𑌾𑌨𑌂 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍 𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑍇 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌯𑌤𑌿। 𑌯𑌃 𑌪𑍁𑌨𑌰𑌤𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌾𑌤𑌿𑌕𑍂𑌲𑍍𑌯𑍇 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌕𑍍𑌰𑍂𑌰𑌾𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌂 𑌦𑌦𑌤𑍍 𑌸𑍍𑌵𑌯𑌮𑍇𑌵 𑌕𑍍𑌰𑍂𑌰𑍇𑌷𑍍𑌵𑍇𑌵 𑌕𑌰𑍍𑌮𑌸𑍁 𑌪𑍍𑌰𑍇𑌰𑌯𑌤𑌿 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 : 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌂 𑌭𑌗𑌵𑌤𑌾—

"𑌤𑍇𑌷𑌾𑌂 𑌸𑌤𑌤𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌭𑌜𑌤𑌾𑌂 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌮𑍍।
𑌦𑌦𑌾𑌮𑌿 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌯𑍋𑌗𑌂 𑌤𑌂 𑌯𑍇𑌨 𑌮𑌾𑌮𑍁𑌪𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇 ॥

---

மங்களையும் பரமாத்மாவே செய்விக்கிறான் என்பது சில வ்யவஸ்தித இடங்களில் மாத்ரமே ஒழிய, ஸகல ஜந்துக்கள் விஷயத்திலும் என்பது இல்லை. எவன் ஏற்கெனவே ஸ்வயமாக அதிமாத்ரம் பகவத் ப்ரியங்களான கார்யங்களில் ப்ரவ்ருத்தியைச் செய்து வருகிறானோ, அவனுக்கு இன்னும் அதிகமான நல்ல புத்தியைக் கொடுத்து, அம்மாதிரி ஸத் கர்மங்களிலேயே மேன்மேல் ப்ரவ்ருத்தியைப் பகவான் மிகுந்த ப்ரீதியுடன் செய்

---

"𑌤𑍇𑌷𑌾𑌂 𑌸𑌤𑌤𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂"—கீழ்ச் சொல்லப்பட்டுள்ள விஷயம் ஸ்ரீ பகவத் கீதையில் தெளிவாக விவரிக்கப்பட்டிருக்கிறபடியால், அந்தக் கீதா வாக்யங்களை இவ்விடத்தில் உதாஹரிக்கிறார். பத்தாவது அத்யாயத்தில், பகவானுடைய குணங்களுடையவும் அவனுடைய விபூதிகளுடையவுமான ஜ்ஞானம் பக்தியின் உத்பத்திக்கும் வ்ருத்திக்கும் காரணங்களாகின்றன வென்பதைச் சொல்லிவிட்டு, பகவான், அப்படித் தேர்ந்த பக்தியை உடையவனுக்கு, தான் செய்யும் அநுக்ரஹ விசேஷத்தை இந்த ச்லோகத்தால் சொல்லுகிறான். 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌸𑌤𑌤𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌭𑌜𑌤𑌾𑌮𑍍—கீழ்ச் சொல்லியபடி பக்தி விவ்ருத்தமாகி அதனால் எப்பொழுதும் என்னுடன் சேர்க்கையைக் கோருகிறவர்களுக்கு, 𑌤𑌮𑍇𑌵 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌯𑍋𑌗𑌂 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌂 𑌦𑌦𑌾𑌮𑌿—என்னுடைய ப்ராப்திக்கு அவச்யம் அபேக்ஷிதமாயும் அதற்குப் பூர்வ பாவியுமான ஸாக்ஷாத்கார ரூப புத்தி யோகத்தை நானே ப்ரீதி பூர்வகமாகக் கொடுக்கிறேன். 𑌯𑍇𑌨 𑌤𑍇 𑌮𑌾𑌮𑍁𑌪𑌯𑌾𑌨𑍍𑌤𑌿—அந்த விசத தமமான ஸாக்ஷாத்கார ரூப புத்தி யோகத்தாலேயே அவர்கள் என்னை அடைகிறார்கள். இதனால், முதலில் பகவத் குண ஜ்ஞானத்தால் பக்தி உண்டாகிற தென்றும், அவனுடைய விபூதி ஜ்ஞானத்தால் அது வ்ருத்தி அடைகின்றதென்றும், அதற்குப் பிறகு பகவத் ப்ராப்திக்கு அபேக்ஷிதமான விசத தம ஸாக்ஷாத்கார ரூப அவஸ்தா விசேஷமானது நம்மால் ஸாதித்துக் கொள்ளக் கூடியதன்றாதலால் அதை அந்தப் பகவானே நமது ப்ரயத்நத்தால் ப்ரீதனாகி நமக்குக் கொடுக்கிறானென்றும் சொல்லப்பட்டதாகிறது. இந்தக் கொடையைத்தான், ச்ருதி, 'நல்ல கர்மாவைச் செய்விக்கிறான்' என்று சொல்லுகிறது.

तेषामेवानुकम्पार्थमहमज्ञानजं तमः ।
नाशयाम्यात्मभावस्थो ज्ञानदीपेन भास्वता ॥ ''

[ஸ. கீ. 10—10, 11.]

---

விக்கிறன்; எவன் அதிமாத்ரம் துஷ்கர்மங்களில் ஏற்கெனவே ப்ரவ்ருத்தித்திருக்கிறனே, அவனுக்கு இன்னும் அதிகமான பாப புத்தியைக் கொடுத்து, அம்மாதிரி துஷ்கர்மங்களிலேயே மேன்மேல் ப்ரவ்ருத்தியைச் செய்விக்கிறன். இந்த அர்த்தத்தை ஸ்ரீ பகவானே, ''तेषां सततयुक्तानाम्'', ''तानहं द्विषतः'' இத்யாதியான தனது வாக்யங்களாலேயே தெளிவித்திருக்கிறன்.

---

''तेषामेव......''—நம்முடைய ஜந்மாந்தர பாபங்கள் ஏராளமாக இருக்கிறபடியால், அவை, பகவத் ப்ராப்திக்குப் பூர்வ பாவியான அந்தப் புத்தி யோகத்தை ஜநிக்க வொட்டாமல் தடுக்கின்றன. அந்தப் பாபங்களெல்லாம் பகவானுடைய ப்ரஸாதத்தாலேயே நாசமடையக் கூடியவையாதலால் இந்த அம்சத்தில் அவனுடைய அநுக்ரஹம் அவச்யம் அபேக்ஷிதமாகின்றது. இந்த ச்லோகம், 'பகவானே அந்த ப்ரதிபந்தகங்களெல்லாவற்றையும் நசிப்பிக்கிறன்' என்பதைச் சொல்லுகிறது. तेषामेवानुकम्पार्थम्—அப்படிப்பட்ட பக்தர்களுடைய அநுக்ரஹத்திற்காகவே, अहमात्मभावस्थः सन्—நான் அவர்களுடைய மநோவ்ருத்தியில் என்னுடைய குண கணங்களை ஆவிஷ்கரித்து நின்று கொண்டு, भास्वता ज्ञानदीपेन—என் விஷய ஜ்ஞாநமாகிற ஜ்வலிக்கும் தீபத்தினுல், अज्ञानजं तमो नाशयामि—அந்தப் புத்தி யோகத்திற்கு விரோதிகளான கர்மங்களெல்லாவற்றையும் நசிப்பிக்கிறேன்.

'' तानहं द्विषतः..........''—எவர்களைப் பகவான் ஸத்கர்ம ப்ரவ்ருத்தியால் அநுக்ரஹிக்கிறன் என்பது கீழில் நிரூபிக்கப்பட்டது. இந்த ச்லோகத்தால், துஷ்கர்ம ப்ரவ்ருத்தியால் எவர்களை அவன் நிக்ரஹிக்கிறன் என்பது சொல்லப்படுகிறது. பதினாறவது அத்யாயத்தில், சாஸ்த்ரத்தை அதிலங்கநம் செய்யும் ஆஸுர ஸர்க்கத்தைச் சொல்லி வரு மிடத்தில், தன்னை த்வேஷிக்கும் துஷ்க்ருதிகளைத் தானே நிக்ரஹிப்பதாகப் பகவானுல் சொல்லப்பட்டிருக்கிறது. द्विषतस्तान् क्रूरानशुभान् नराधमान्— சாஸ்த்ரத்தை அதிலங்கநம் செய்து துஷ்கர்மங்களிலேயே ப்ரவ்ருத்திக்கும் பாபிகளை, अहमजस्रं संसारेषु, (तत्रापि) आसुरीष्वेव योनिषु क्षिपामि— இறப்புப் பிறப்பு ரூபமாகச் சுழன்று வரும் ஸம்ஸாரங்களிலும், அதிலும் என்னுடைய ஆநுகூல்யத்திற்கு விரோதிகளாக இருக்கும் ஜந்மங்களிலேயே போடுகிறேன். இப்படிப்பட்டவர்களுக்குப் பாப புத்தியைக்கொடுப்பதும் பகவத் க்ருபா கார்யமே தவிர நைர்க்ருண்யமாக மாட்டாது. இம்மாதிரி பாப கர்மங்களால் அவர்கள் சீக்ரத்திலேயே சாஸ்த்ர விதி நிஷேதங்களுக்கு அநர்ஹமான ஜந்மங்களைப் பெற்று

" 𑌤𑌾𑌨𑌹𑌂 𑌦𑍍𑌵𑌿𑌷𑌤𑌃 𑌕𑍍𑌰𑍂𑌰𑌾𑌨𑍍 𑌸𑌂𑌸𑌾𑌰𑍇𑌷𑍁 𑌨𑌰𑌾𑌧𑌮𑌾𑌨𑍍 ।
𑌕𑍍𑌷𑌿𑌪𑌾𑌮𑍍𑌯𑌜𑌸𑍍𑌰𑌮𑌶𑍁𑌭𑌾𑌨𑌾𑌸𑍁𑌰𑍀𑌷𑍍𑌵𑍇𑌵 𑌯𑍋𑌨𑌿𑌷𑍁 ॥ " 𑌇𑌤𑌿 [𑌭. 𑌗𑍀.]

𑌸𑍋𑌽𑌯𑌂 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌭𑍂𑌤𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮𑍋 𑌨𑌿𑌰𑌤𑌿𑌶𑌯𑌪𑍁𑌣𑍍𑌯𑌸𑌂𑌚𑌯𑌕𑍍𑌷𑍀𑌣𑌾𑌶𑍇𑌷𑌜𑌨𑍍𑌮𑍋𑌪𑌚𑌿𑌤𑌪𑌾𑌪𑌰𑌾𑌶𑍇𑌃 𑌪𑌰𑌮𑌪𑍁𑌰𑍁𑌷𑌚𑌰𑌣𑌾𑌰𑌵𑌿𑌨𑍍𑌦𑌶𑌰𑌣𑌾𑌗𑌤𑌿𑌜𑌨𑌿𑌤𑌤𑌦𑌾𑌭𑌿𑌮𑍁𑌖𑍍𑌯𑌸𑍍𑌯 𑌸𑌦𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑍋𑌪𑌦𑍇𑌶𑍋𑌪𑌬𑍃𑌂𑌹𑌿𑌤𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌧𑌿𑌗𑌤𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌯𑌾𑌥𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌾𑌵𑌬𑍋𑌧𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌾𑌹𑌰𑌹𑌰𑍍-

---

𑌸𑍋𑌽𑌯𑌂 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌭𑍂𑌤𑌃.........—எவன், அளவற்ற பாக்ய விசேஷத்தால் நாசத்தை அடைந்திருக்கிற ஸகல ஜன்மாந்தர பாபங்களை உடைத்தாயும், பரம புருஷனுடைய பாதாரவிந்தங்களையே தஞ்சமாகக் கைப்பற்றி அதனால் அந்தப் பகவானுடைய ஆபிமுக்யத்தை ஸம்பாதித்துக்கொண்டும், சாஸ்த்ரங்களிற் சொல்லப்பட்டுள்ள தத்வங்களின் உண்மையை ஸதாசார்யர்களுடைய உபதேசத்தினால் தெளியப்பெற்று அந்தத் தெளிவினால் ப்ரதி தினமும் மேன்மேல் வளர்ந்துவரும்

---

பிறகு உஜ்ஜீவநத்தைத் தேடக்கூடிய தசையை அதிக விளம்பமில்லால் அடைவதற்கு அர்ஹராகிறார்கள்; பாப புத்தியைக்கொடா விட்டால், அவர்கள், சாஸ்த்ர விதி நிஷேதங்களுக்கு அர்ஹமான ஜன்மங்களையே பஹு காலம் அடைந்தவர்களாய், அந்த ஜன்மங்களிலும் அதிகமான பாபத்தை ஸம்பாதித்துக்கொண்டு உஜ்ஜீவநோபாயத்திற்கு அதிமாத்ரம் விப்ரக்ருஷ்டராவார்களன்றோ?

𑌸𑍋𑌽𑌯𑌂 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌭𑍂𑌤𑌃..............—ஜீவாத்மாக்களெல்லாம் பரமாத்மாவின் நியமநத்திற்கு உட்பட்டவைகள் என்று சொல்வதால் ப்ரஸங்கிக்கும் சங்கைகள் இது வரை பரிஹரிக்கப்பட்டன. இந்தப் பரிஹாரத்தில் பரமாத்ம ப்ராப்திக்கு உபாயமான பக்தி ப்ரஸக்தமானதால், இப்பொழுது அந்த உபாயத்தைத் தெளிய விசாரிக்க ப்ரவ்ருத்திக்கிறார். ஏற்கெனவே " 𑌏𑌤𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌹𑍃𑌦𑌯𑌮𑍍 " [213-வது பக்கத்தைப் பார்க்க] என்று ஆரம்பித்து இந்த உபாயம் ஸங்க்ரஹமாக விசாரிக்கப்பட்டிருக்கிறது. இவ்விடத்தில் அதை ஸ்புடமாகச் சொல்லுகிறார்.

𑌪𑌰𑌮𑌪𑍁𑌰𑍁𑌷𑌚𑌰𑌣𑌾𑌰𑌵𑌿𑌨𑍍𑌦𑌶𑌰𑌣𑌾𑌗𑌤𑌿 —இது, '𑌮𑌾𑌮𑍇𑌵 𑌯𑍇 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌮𑌾𑌯𑌾𑌮𑍇𑌤𑌾𑌂 𑌤𑌰𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇'' என்று சொல்லப்படும் அங்க ப்ரபத்தியைச் சொல்லுகிறது.

𑌉𑌪𑌬𑍃𑌂𑌹𑌿𑌤 —புஷ்கலமாகச் செய்யப்பட்ட. ஸதாசார்யர்களின் உபதேச முகமாக அடையப்பட்ட ஜ்ஞானமே தெளிந்த ஜ்ஞானமாகு மென்பது குறிப்பு.

𑌶𑌮𑌦𑌮𑌤𑌪𑌃𑌶𑍌𑌚𑌕𑍍𑌷𑌮𑌾𑌰𑍍𑌜𑌵𑌭𑌯𑌾𑌭𑌯𑌸𑍍𑌥𑌾𑌨𑌵𑌿𑌵𑍇𑌕𑌦𑌯𑌾𑌹𑌿𑌂𑌸𑌾
𑌦𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌗𑍁𑌣𑍋𑌪𑍇𑌤𑌸𑍍𑌯 𑌵𑌰𑍍𑌣𑌾𑌶𑍍𑌰𑌮𑍋𑌚𑌿𑌤𑌪𑌰𑌮𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌰𑌾𑌧𑌨𑌵𑍇𑌷
𑌨𑌿𑌤𑍍𑌯𑌨𑍈𑌮𑌿𑌤𑍍𑌤𑌿𑌕𑌕𑌰𑍍𑌮𑍋𑌪𑌸𑌂𑌹𑍃𑌤𑌿𑌨𑌿𑌷𑌿𑌦𑍍𑌧𑌪𑌰𑌿𑌹𑌾𑌰𑌨𑌿𑌷𑍍𑌠𑌸𑍍𑌯 𑌪𑌰𑌮𑌪𑍁-
𑌰𑍁𑌷𑌚𑌰𑌣𑌾𑌰𑌵𑌿𑌨𑍍𑌦𑌯𑍁𑌗𑌲𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑌾𑌤𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑍀𑌯𑌸𑍍𑌯 𑌤𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌿𑌕𑌾𑌰𑌿𑌤𑌾𑌨𑌵𑌰𑌤𑌸𑍍𑌤𑍁𑌤𑌿

---

சமம் தமம் தபஸ் சௌசம் க்ஷமை ஆர்ஜவம் பகவதபசாராதிகளிலிருந்து பயம் பகவான் ரக்ஷிப்பன் என்னும் விச்வாஸத்தால் ஜநிக்கும் தைர்யம் தயை அஹிம்ஸை இவை முதலிய ஆத்ம குணங்களை உடையவனும், தனது வர்ணத்திற்கும் ஆச்ரமத்திற்கும் உசிதமான நித்ய நைமித்திக கர்மங்களைப் பரம புருஷாராதந ரூபமாக விடாமற் செய்வதிலும் நிஷித்த கர்மங்களைப் பரிஹரிப்பதிலும் நிஷ்டையை உடையவனும், தான் தன்னைச் சேர்ந்தவை இவை யெல்லாவற்றையும் பரம புருஷனுடைய பாதாரவிந்தங்களில் ஸமர்ப்பித்துவிட்டு அவனிடத்திலுள்ள பக்தியை உள்ளடக்கக் கூடாமல் எப்பொழுதும் அவனுடைய ஸ்தோத்ரம் ஸ்மரணம் நமஸ்காரம் வந்தநம் கைங்கர்யங்களில் ப்ரயத்நம் நாம ஸங்கீர்த்தநம் குண ச்ரவணம் குண வசநம் த்யாநம் அர்ச்சநம் ப்ரணாமம் இவை முதலானவைகளைச் செய்துகொண்டு அவைகளால் ப்ரீ

---

**𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌯𑌾𑌥𑌾𑌤𑍍𑌮𑍍𑌯**—'**𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂**' என்பது தர்மியையும் '**𑌯𑌾𑌥𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌂**' என்பது அதன் ப்ரகாரத்தையும் குறிக்கின்றன.

**𑌶𑌮𑌃**—அந்தக்கரணத்தின் ஜயம்; **𑌦𑌮𑌃**—பாஹ்யேந்த்ரியங்களின் ஜயம்; **𑌤𑌪𑌃**—க்ருச்ராதிகளால் ஏற்படும் பரிசுத்தி; **𑌕𑍍𑌷𑌮𑌾**—துக்கத்தைப் பொறுக்கும் தன்மை; **𑌭𑌯𑌸𑍍𑌥𑌾𑌨𑌵𑌿𑌵𑍇𑌕𑌃**—பகவத் பாகவதாபசாராதிகளிலிருந்து பயப்படும் தன்மை; **𑌅𑌭𑌯𑌸𑍍𑌥𑌾𑌨𑌵𑌿𑌵𑍇𑌕𑌃**—பகவானே ரக்ஷகன் என்னும் த்ருட நிச்சயத்தால் ஏற்படும் தைர்யம்; **𑌦𑌯𑌾**—பிறர்களின் துக்கத்தை ஸஹியாமலிருக்கும் தன்மை; **𑌅𑌹𑌿𑌂𑌸𑌾**—பிறர்களுடைய துக்கத்திற்குக் காரணமாகாமல் இருப்பது.

**𑌵𑌰𑍍𑌣𑌾𑌶𑍍𑌰𑌮𑍋𑌚𑌿𑌤𑌪𑌰𑌮𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌰𑌾𑌧𑌨𑌵𑍇𑌷**—நாம் நித்ய நைமித்திக ரூபங்களான கர்மங்களைச் செய்யும் பொழுதெல்லாம் அவைகளைப் பகவதாராதந ரூபமாகவே செய்ய வேண்டும். **𑌉𑌪𑌸𑌂𑌹𑍃𑌤𑌿**—அநுஷ்டாநம்; **𑌨𑌿𑌷𑌿𑌦𑍍𑌧𑌪𑌰𑌿𑌹𑌾𑌰**—சாஸ்த்ரங்களில் விஹிதங்களான கர்மங்களைச் செய்வது போல் சாஸ்த்ரங்களில் நிஷித்தங்களாக இருக்குமெல்லாவற்றையும் ஸாவதாநமாகப் பரிஹரிக்க வேண்டுவதும் அவச்யம்.

**𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑌾𑌤𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑍀𑌯𑌸𑍍𑌯**—இது பர ஸமர்ப்பணத்தைக் குறிக்கிறது. **𑌭𑌕𑍍𑌤𑌿𑌕𑌾𑌰𑌿𑌤**—பகவானை ஸ்தோத்ரம் செய்வது முதலியவை யெல்லாம், உள்ளிருக்கும் பக்தியின் பரீவாஹமாக இருத்தல்வேண்டும். **𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌃**—குணங்களைச் சொல்வது; **𑌯𑌤𑌨𑌂**—பகவதுத்யாநம் முதலியவைகளைச் செய்வது; **𑌕𑍀𑌰𑍍𑌤𑌨𑌂**—நாமோச்சாரணம்; **𑌵𑌚𑌨𑌂**—மற்றவர்களுக்குப் பகவத் குணங்களைச் சொல்வது; **𑌧𑍍𑌯𑌾𑌨𑌂**—